

பின்ஹெய்ரோ கோட்பாடுகள்

அகதிகள் மற்றும் இடம்பெயர்ந்த ஆட்களுக்கான வீட்டு மற்றும் ஆதன மீளளிப்பு தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் கோட்பாடுகள்

COHRE

வீட்டு வசதிக்கான உரிமைகள் மற்றும் வெளியேற்றல்களுக்கான நிலையம் (COHRE)

www.cohre.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாடு 2: எதேச்சாதிகாரமாக அல்லது சட்டமுரணாக வீடுகள், காணிகள் மற்றும் ஆதனங்களிலிருந்து அகற்றப்பட்ட எல்லா அகதிகளும் இடம்பெயர்ந்த ஆட்களுக்கும் அந்த வீட்டு, காணி மற்றும்/அல்லது ஆதனம் என்பவற்றை மீள்நிலைப்படுத்துவதற்கான உரிமை உண்டு.

- பின்ஹெய்ரோ கோட்பாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

பின்ஹெய்ரோ கோட்பாடுகள் பற்றியதோர் அறிமுகம்			3
அகதிகள் மற்றும் இடம்பெயர்ந்த ஆட்களுக்கான வீட்டு மற்றும் ஆதன மீளளிப்பு தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் கோட்பாடுகள் - பின்ஹெய்ரோ கோட்பாடுகள்			6
பிரிவு – I	நோக்கெல்லையும் பிரயோகமும்		7
	கோட்பாடு 1.	நோக்கெல்லையும் பிரயோகமும்	7
பிரிவு – II	வீட்டுவசதிக்கும் ஆதன மீளளிப்புக்குமான உரிமை		7
	கோட்பாடு 2.	வீட்டுவசதிக்கும் ஆதன மீளளிப்புக்குமான உரிமை	7
பிரிவு – III	அடிப்படை ஆதாரக் கோட்பாடுகள்		8
	கோட்பாடு 3.	பாரபட்சம் காட்டாதிருப்பதற்கான உரிமை	8
	கோட்பாடு 4.	ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான சமத்துவத்திற்கான உரிமை	8
	கோட்பாடு 5.	இடம்பெயர்விலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை	8
	கோட்பாடு 6.	அந்தரங்கம் மற்றும் இல்லத்திற்கான கௌரவம் என்பவற்றுக்கான உரிமை	9
	கோட்பாடு 7.	உடமைகளை அமைதியாக அனுபவிப்பதற்கான உரிமை	9
	கோட்பாடு 8.	போதியளவிலான குடிமனைக்கான உரிமை	9
	கோட்பாடு 9.	சுதந்திரமான நடமாட்டத்திற்கான உரிமை	10
பிரிவு – IV	பாதுகாப்புடனும் கௌரவத்துடனும் தன்னிச்சையாக திரும்பிவருவதற்கான உரிமை		11
	கோட்பாடு 10.	பாதுகாப்புடனும் கௌரவத்துடனும் தன்னிச்சையாக திரும்பி வருவதற்கான உரிமை	11
பிரிவு – V	சட்டம், கொள்கை, செயல்முறை மற்றும் நிறுவனஞ்சார் அமுலாக்க பொறிமுறைகள்		12
	கோட்பாடு 11.	சர்வதேச மனித உரிமைகள், அகதிகள், மனிதாபிமான சட்டம் மற்றும் அதனைப் போன்ற தராதரங்களுடன் ஒத்திணையக்கூடிய தன்மை	12
	கோட்பாடு 12.	தேசிய செயல்முறைகள் நிறுவனங்கள் மற்றும் பொறிமுறைகள்	12
	கோட்பாடு 13.	மீளளிப்புக் கோரிக்கை செயல்முறைகளிற்கான அணுகுமுறை	13
	கோட்பாடு 14.	தீர்மானமெடுப்பதில் போதியளவிலான கலந்துரையாடலும் பங்குபற்றுதலும்	14
	கோட்பாடு 15.	வீட்டு, காணி மற்றும் ஆதன பதிவேடுகளும் ஆவணப்படுத்தலும்	15
	கோட்பாடு 16.	வாடகைக்கு இருப்போரினதும் உரித்துடையோர் அல்லாதோரினதும் உரிமைகள்	16
	கோட்பாடு 17.	இரண்டாந்தரக் குடியிருப்பாளர்கள்	16
	கோட்பாடு 18.	சட்டவாக்க அளவுகோல்கள்	17
	கோட்பாடு 19.	எதேச்சாதிகாரமானதும் பாரபட்சமானதுமான சட்டங்களை தடை செய்தல்	17
	கோட்பாடு 20.	மீளளிப்பு முடிவுகளையும் தீர்ப்புகளையும் அமுல்படுத்தல்	17
	கோட்பாடு 21.	நட்ட ஈடு	18
பிரிவு – VI	சர்வதேச நிறுவனங்களையும் உள்ளடக்கிய சர்வதேச சமூகத்தின் வகிபங்கு		19
	கோட்பாடு 22.	சர்வதேச சமூகத்தின் பொறுப்புக்கள்	19
பிரிவு – VII	பொருள்கோடல்		20
	கோட்பாடு 23.	பொருள்கோடல்	20
பின்ஹெய்ரோ கோட்பாடுகளின் பிரயோகம்: மீளளிப்பு தீர்மானிக்கப்படாதுள்ள சில தெரிவுசெய்யப்பட்ட இடங்கள்			21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்ஹெய்ரோ கோட்பாடுகள் பற்றியதோர் அறிமுகம்

அகதிகளும் இடம்பெயர்ந்த ஆட்களும் அவ்வாறு செய்வது தகுந்தது என்று காணுகின்ற போது, தங்களது நாடுகளுக்கு மாத்திரமன்றி, தமது பூர்வீக குடிமனைகள் மற்றும் நிலங்களுக்கும் கூட திரும்பி வருவதற்கான உரிமைகளைச் சுட்டிக்காட்டுகின்ற முக்கியமான புதிய சர்வதேச தராதரமொன்றிற்கான முழுமையான அம்சங்களையும் இக்கைநூல் உள்ளடக்குகின்ற. பின்ஹெய்ரோ கோட்பாடுகளானவை, ஒரு தசாப்த காலத்திற்கும் அதிகமாக சர்வதேச மற்றும் உள்நாட்டு செயற்பாடுகளினால் வெளிப்பட்டுள்ள இடம்பெயர்வுக்கான மூலாதார நிவாரணமொன்றாக வீட்டு மற்றும் ஆதன மீளளிப்புக்கான உரிமையானது உச்சநிலையைப் பெற்றுள்ளது.

ஒருவரது குடிமனையிலிருந்து சூழ்நிலையினால் அல்லது திட்டத்தினால் கட்டாயப் படுத்தப்படுகின்றதனைவிட பெரும் மனவேதனை தரும் அனுபவங்களாக இருப்பினும், ஒவ்வொரு வருடமும் பல கோடி மக்கள் தமது குடிமனைகளை, நிலத்தை மற்றும் ஆதனங்களை விட்டு வேறெந்தத்தெரிவுகளும் இல்லாமையினால், தமது விருப்பத்திற்கு எதிராக வெளியேறுகின்றனர். ஆயுதமோதல், இன அழிப்பு, இனச்சுத்திகரிப்பு என்பவற்றினால் ஏற்பட்டிருப்பினும் அல்லது பரந்தளவிலான வீட்டு, காணி மற்றும் ஆதன உரிமை மீறல்கள் அரசாங்கங்களினால், கிளர்ச்சிக்குழுக்களினால் அல்லது மற்றையவர்களால் மேற்கொள்ளப்படுவதோடு, இடம்பெயர்வானது எப்பொழுதும் இடர்மிகுந்ததாகவும், மிருகத்தனமானதாகவும் இருப்பதுடன், மிக அரிதான சந்தர்ப்பங்களிலேயே அதனைவிடக் குறைந்த தன்மையுடையவையாக உள்ளன.

உலகளாவிய ரீதியில் தற்பொழுது 120 இலட்சத்திற்கும் அதிகமான அகதிகளும், அதனுடன்சேர்த்து 250 இலட்சம் உள்ளக இடம்பெயர்ந்த ஆட்கள் தமது சொந்த நாட்டின் எல்லைக்குள்ளேயே முகாம்கள், சேரிகள் மற்றும் தற்காலிக புகலிடங்களில் இருப்பதாக உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்கள் காட்டுகின்றது. கிட்டத்தட் 370 இலட்சம் இம்மக்கள் குழுவானது, உலகம் இன்று எதிர்நோக்கும் இடம்பெயர்வின் உக்கிரத்தை காட்டுகின்றது. இத்தொகையுடன் தமது வீடுகளிலிருந்து அரசியல் ரீதியான உந்துதலால் வலுக்கட்டாயப்படுத்திய வெளியேற்றல்கள், அபிவிருத்தியால் தூண்டப்பட்ட இடம்பெயர்வுகள், இயற்கை அனர்த்தங்கள் அல்லது வேறு வழிகளிலானவற்றையும் ஒன்றுசேர்ப்போமாயின், உலகின் மொத்த இடம்பெயர்ந்தவர்கள் பெரும்பாலும் 500 - 600 இலட்சத்திற்கு கிட்டியதாகவும், இல்லையெனில் இதைவிட கணிசமான அதிகரித்தளவு தொகையாகவும் இருக்கும்.

இடம்பெயர்வின்போது காணி, வீட்டு மற்றும் ஆதன உரிமைகளை இழத்தல், இதனைத் தொடர்ந்து தன்னிச்சையாக திரும்பிவருவதனை அவர்கள் தெரிவுசெய்தவுடன் தமது பூர்வீக குடிமனைகளுக்கும் காணிகளுக்கும் மீள திரும்ப இயலாமை என்பன உலகலாவிய இடம்பெயர்ந்த மக்கள் எதிர்நோக்கின்ற மிகக் கடுமையான பிரச்சினைகளில் சிலவாகும். உண்மையிலேயே, பாதுகாப்புடனும் கௌரவமாகவும் தமது பூர்வீக குடிமனைகளுக்கு தாம் மீள திரும்பிவருவதனையே உலகிலுள்ள எல்லா இடம்பெயர்ந்தோரும் கொண்டுள்ள பிரதான விருப்பமாகும்.

இத்தகைய பிரச்சினைகளே முழு மீளளிப்புச் சமன்பாடடின் மையமாகவுள்ளது. இதன் காரணம் எதுவாயிருப்பினும், தமது வழமையான வாழ்விடத்திலிருந்து வலுக்கட்டாயப்படுத்தப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் பரிகாரம் என்பவற்றின் தேவைகளுக்கான சரியான தருணம் என்பதை தீர்மானிக்கும் நிகழ்வாக இடப்பெயர்வு எப்பொழுதும் கருதப்படல் வேண்டும். இடம்பெயர்வையும் அதற்கான காரணங்களையும் நிரந்தரமானதும், நிலைத்துநிற்கக்கூடியதும் மற்றும் நீதியானதுமான முடிவுக்கு கொண்டுவருவதற்கான சட்டப்படி பாதுகாப்பானதும், தகுதியானதும் மற்றும் நடைமுறை சட்டகத்தினுள் உள்ளடங்குவதுமானதொரு நிவாரணத்தையே வீட்டு மற்றும் ஆதன மீளளிப்பு செயல்முறை வழங்குகின்றது.

தமது கட்டுப்பாட்டிற்கு மேலாக வலுக்கட்டாயப்படுத்தி இடம்பெயர்ந்த மக்கள், அவர்கள் வன்முறையாக கட்டாயப்படுத்தி வெளியேற்றப்பட்டார்கள் அல்லது பாதுகாப்பற்றதொரு நிலைமையிலிருந்து பாதுகாப்பைத் தேடி ஓடினர் என்ற சாதாரண காரணத்துக்காக அவர்களின் வீடுசார், நிலம் மற்றும் ஆதன உரிமைகளை இழக்கின்ற நிலையை ஒருபோதும் அவர்கள் எதிர்நோக்கக்கூடாது. அத்துடன் இடம்பெயர்ந்தவர்களனால் உண்மையாக மீள் திரும்புதல் அல்லது மீள் உடமைகொள்ளல் என்பன பாதுகாப்பற்றது, விரும்பத்தக்கதல்ல அல்லது சாத்தியமற்றது (உண்மையாக அகதிகள் பிறிதோர் நாட்டில் தஞ்சம் கோருகையில், பாதுகாப்பானதொரு மூன்றாம் நாட்டில் மீள்குடியமர்ந்து நிரந்தர வதிவிட அனுமதியையும் தேடுகையில்) எனக் கருதுகையில் சில இடம்பெயர்ந்த ஆட்கள் உண்மையாக மீள் திரும்புவதற்கான எண்ணத்தைக் கொண்டிருக்காதபோது அல்லது கொண்டிருந்த போதிலும்கூட தாமாகவே அவ்வுரிமைகளை துறக்கின்றனர்.

மேலும் இடம்பெயர்ந்தவர்களுக்கும் அவர்களது வீடுகளில் அவர்களின் சம்மதமின்றி குடியிருப்பவர்களுக்கும் (இரண்டாம் நிலைக் குடியிருப்பாளர் செயன்முறை) இடையிலான வீட்டு, காணி மற்றும் ஆதன பிணக்குகள், போதுமானளவு அமையாத சட்ட பாதுகாப்பு மற்றும் மீளத்திரும்பி வருபவர்களுக்கான நிவாரணங்கள், மற்றும் இதுபோன்ற பல பிரச்சினைகள் மீளத்திரும்பி வருவதற்கான உரிமையையும் அதனோடு தொடர்பான வீட்டு, காணி மற்றும் ஆதன மீளளிப்பு உரிமைகளையும் நடைமுறைப்படுத்துவதில் வலுவான தடைகளாகக் காணப்படுகின்றன. இதன்விளைவாக தமது பூர்வீக வீடுகளுக்கு துணிச்சலாக திரும்பிவருவதற்கு விரும்புகின்ற இலட்சக்கணக்கான அகதிகளும் இடம்பெயர்ந்த ஆட்களும் அவ்வாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதற்கு முடியாமலிருக்கின்றது. ஏனெனில், மீளளிப்பு உரிமைகளானவை சம்பந்தப்பட்ட நாடுகளில் தோதான அதிகார அமைப்புக்களினாலும் சர்வதேச செயற்பாட்டாளர்களினாலும் தகுந்த அவதானத்துடன் கவனிக்கப்படுவதில்லை.

இறுதியாக, மீளளிப்புக் கருத்தேற்பானது நம்பிக்கையின் தோற்றுவாய் ஒன்றையும் வலுவான நீதியின் ஊற்றொன்றையும் வழங்குகின்றது. இடம்பெயர்ந்தோருக்கு மீளளிப்பு வழங்குகின்ற வாக்குறுதி யாதெனில், அநீதியின் ஒரு வரலாறு, அடிப்படை உரிமைகளின் துஷ்பிரயோகம், அல்லது பயங்கரமும் தொந்தரவும் என்பவற்றில், குறைந்தது இவற்றில் ஒரு முக்கிய அம்சத்தையாவது, உண்மையில் மாற்றியமைக்க முடியும் என்பதாகும். உலகளாவிய மனித உரிமைகள் தொகுப்பின பெரும் முன்னேற்றகரமானதொன்றாக எது தென்படுதல் வேண்டுமெனில், வசிப்பிடம், காணி அல்லது ஆதனத்தை இடம்பெயர்ந்தோர், இடம்பெயர்வின், ஆரம்பத்தில் குடிமனையென்று அழைத்தவற்றை மீளப்பெறவும் மீள உடமைகொள்வதற்குமான இந்த விருப்பமானது தனியானதும் கோரிப்பெறக்கூடியதுமான உரிமையொன்றாக அதனை நாடிப்பெற விரும்புகின்ற இடம்பெயர்ந்த எல்லா ஆட்களுக்கும் ஏற்புடையதாக அண்மைய ஆண்டுகளில் முன்னேற்றமடைந்திருக்கின்றது என்பதாகும். தன்னிச்சையாகவும், பாதுகாப்புடனும் மற்றும் கௌரவமாகவும் திரும்பிவருவதற்கான பரந்தளவு உரிமை என்பது வெறுமனே ஒருவரின் பூர்வீக நாட்டிற்கு திரும்பி வருவதனையன்றி ஒருவரின் பூர்வீக வீட்டிற்கு திரும்பிவருவதனையும் உள்ளடக்குவதாக தற்போது விளங்கிக்கொள்ளப்படுகின்றது. இக்காரணத்தினாலேயே தற்பொழுது UNHCR உம் ஏனைய தேசிய மற்றும் சர்வதேச முகவர்களும் முன்னொருபோதும் இல்லாதளவு மீளளிப்பு தொடர்பான அடிப்படைக் கொள்கைகளில் அதிகளவு கவனஞ்செலுத்தி வருகின்றனர்.

பொதுவான கருத்தேற்புக்களிலிருந்தும் தேசிய சட்டங்களிலிருந்தும் பரந்தளவிலான உலகத் தராதரத்தை நோக்கி

அகதிகள் மற்றும் இடம்பெயர்ந்தவர்களின் இருப்பிட, காணி மற்றும் ஆதன மீளளிப்புக்கான உரிமைகள் சர்வதேச சட்டத்தின் பல்வேறு பரப்புகளிலும் உள்ள அடிப்படைக் கோட்பாடுகளிலும் உறுதியாக நிலைநாட்டப்பட்டவையாக விளங்குகின்றன. ஒரு சட்டக் கருத்தேற்பு என்ற வகையில் ஐயத்துக்கிடமின்றி மீளளிப்பானது ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக பல நியாயாதிக்கங்களிலும் சட்டக் கடப்பாடுகள் மீதான மீறல்களுக்கு மையப் பரிகாரமாக (மற்றும் பெரும்பாலும் விரும்பப்பட்டதாகவும்) மீளளிப்பே கையாளப்பட்டு வந்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபை மற்றும் பொதுச் சபையின் எண்ணிலடங்காத தீர்மானங்கள் கடந்த 60 ஆண்டு காலமாக திட்டவட்டமாக இருப்பிட, மற்றும் ஆதன மீளளிப்புக்கான உரிமைகளை வெளிப்படுத்தி வந்துள்ளன. அண்மைய தசாப்தங்களில் பல்வேறுபட்ட சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் தேசிய நிறுவகங்களும் சகல அகதிகளும் உள்நாட்டில இடம்பெயர்ந்தோரும் தமது நாடுகளுக்கு எதுவித கட்டுப்பாடுகளுமின்றி மீள்திரும்பி தம்மிடமிருந்து கவர்ந்து கொள்ளப்பட்ட இருப்பிடம் மற்றும் ஆதனங்களை மீளப்பெறுவதற்கும் அல்லது அவ்வாறு மீளப்பெற முடியாதவற்றுக்கு இழப்பீடு பெறுவதற்கும் உரிமையுடையவர்கள் என்பதை மீள உறுதிப்படுத்தியுள்ளன. இருப்பிட, காணி மற்றும் ஆதன மீளளிப்பு மற்றும் சமாதானம், ஸ்திரத்தன்மை, மீள்குடியேற்றம், மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்பவற்றுக்கு இடையிலான நேரடித்தொடர்புகள் இடம்பெயர்ந்தவர்களுக்கான மீளளிப்பு உரிமை மூலம் மனித உரிமை நிவாரணங்களாக சர்வதேச சமூகத்தின் ஊடான அங்கீகாரமாக வழங்கப்பட்டுக்கொண்டிருப்பவை தற்போது சமாதானத்தை ஆக்க பூர்வமாக கட்டியெழுப்பும் எந்த ஒரு உபாயத்திலும் முக்கியமான மூலவிடயங்களாக அமைந்திருக்கின்றன.

அண்மைய தசாப்தங்களில், பொஸ்னியா-ஹேர்ஸ்கோவினியா, கொசோவா மற்றும் தஜிகிஸ்தான் முதலான மோதலுக்குப் பிந்தியதான சூழ்நிலைகளில் தென்னாபிரிக்கா அல்லது ஈராக் போன்ற அதிகாரமயமாக்கத்திற்கு பிந்திய நாடுகளில் கிழக்கு ஜேர்மனி, லட்வியா மற்றும் அல்பேனியா உள்ளடங்கலான கம்யூனிசத்திற்கு பிந்திய நாடுகளில் மீளளிப்பு உரிமைகள் இனங்காணப்பட்டுள்ளதுடன், சட்டங்களும் நடைமுறைகளும் அபிவிருத்தி செய்யப்பட்டதுடன் அமுல்ப்படுத்தப்பட்டன. இந்த நடைமுறையில் மில்லியன் கணக்கான இடம்பெயர்ந்த மக்கள் மீளத்திரும்பி தங்கள் சொந்த இருப்பிட, காணி மற்றும் ஆதனங்களை மீளப்பெற்று வாழக் கூடியதாகவிருந்தது. இருப்பிட ஆதன மீளளிப்பு உரிமைகளுக்கான இத்தகைய புதிய உலக தராதரங்களின் வெளிப்படுத்துகைக்கு பல காரணிகள் காரணங்களாக அமைந்திருக்கின்ற அதேவேளையில் அனேகமாக தேசிய மட்ட மீட்டளிப்பு நிகழ்ச்சிகளில் ஒருங்கு குவிகின்ற தன்மையானது, மீளளிப்பு உரிமைகளைப் பெற்றுக்கொள்வதில் மிகத் தொலைவில் பின்தங்கியுள்ளவர்களின் அவல நிலை தொடர்பான பரந்துபட்ட உலகளாவிய விழிப்பூட்டல்களுடன் ஒப்பிடும் போது, 2005 ஆம் ஆண்டின் பின்ஹெய்ரோ கோட்பாடுகளின் ஏற்றுக்கொள்ளப்படும் தன்மைக்கு முக்கிய தூண்டுதல் காரணிகளாக அமைந்தன.

இனப் பாரபட்சத்தை ஒழித்தலுக்கான ஆணைக்குழு 1997ல் மனித உரிமைகளை அபிவிருத்தி செய்வதற்கும் பாதுகாப்பதற்குமான துணைக்குழுவுக்கு (தொடர்ச்சியாக கோட்பாடுகளை தெரிவித்த அமைப்பு) "அகதிகளின் மீள்திரும்புகை" அல்லது இடம்பெயர்ந்தவர்களின் ஆதனம் பற்றிய ஆய்வில் கூறிய முன்மொழிவே பின்ஹெய்ரோ கோட்பாடுகளாக இறுதியில் வெளிவருவதற்கு ஐக்கிய நாடுகள் சபையினுள்ளேயே முன்னெடுக்கப்பட்ட நடைமுறைக்கு ஆரம்பமாக அமைந்தது. அடுத்து வந்த வருடத்தில் துணைக்குழுவானது தனது முதல் ஈடுபாட்டை மீட்டளிப்பு உரிமைகள் தொடர்பான விடயப்பரப்பில் வெளியிட்டதுடன் அகதிகள் மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் மீள்திரும்பும் உரிமைகள் தொடர்பில் மீளளிப்பு உரிமைகளை 1998/26 ஆம் இலக்க தீர்மானமாக ஏற்றுக்கொண்டமையானது மீளளிப்பு உரிமைகள் தொடர்பான விடயத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை மனித உரிமைகள் அக்கறையாகக் கொள்வதற்கான துணைக்குழுவின் ஆழமான அக்கறையை துல்லியமாக வெளிக்காட்டுவதாக உள்ளது. 1999 இல், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவானது துணைக்குழுவை இருப்பிட மற்றும் ஆதன மீளளிப்பு தொடர்பிலான அதன் பணியை அகதிகள் மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் மீள்திரும்புகையின் பின்னணியில் தொடருமாறு ஊக்குவித்தது. 2001இல், துணைக்குழுவானது துணைக்குழுவின் நிபுணரான, பிரேசிலின், போலோ சீர்கியோ பின்ஹெய்ரோவை குறித்த தலைப்பில் செயற்பாட்டு அறிக்கை ஒன்றைத் தயாரிக்கமாறு கூறியதன் மூலம் அச்செயன்முறையில் மேலதிகமாக இன்னொரு அடியை எடுத்துவைத்தது.

அகதிகள் மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் இருப்பிட மற்றும் ஆதன மீளளிப்பு தொடர்பிலான விசேட அறிக்கையாளராக 2002 இல் பின்ஹெய்ரோவை நியமித்த பின்னர், அவரது 2003 ஆம் ஆண்டின் முதல்நிலைக் ஆய்வினைக் கருத்திலெடுத்த போது, துணைக்குழுவானது முதல்நிலை ஆய்வில் அமைந்த ஆரம்ப முடிவுகளின் அடிப்படையில் இருப்பிட மற்றும் ஆதன மீளளிப்பு தொடர்பிலான மாதிரி கோட்பாடுகளை அல்லது வழிகாட்டல்களை தயாரிக்குமாறு விசேட அறிக்கையாளரைக் கேட்டுக்கொண்டது. 2004 இல், பின்ஹெய்ரோ பரிசீலனைக்கும் மீளாய்வுக்குமென ஒரு தொகுதி ஆரம்பக் கோட்பாடுகளை துணைக் குழுவுக்குச் சமர்ப்பித்தார். விரிவான உள்ளீடுகளை வழங்கிய பின்னர் துணைக்குழுவானது அவரை இறுதி மாதிரியை சமர்ப்பிக்குமாறு ஆகஸ்ட் 2005இல் கேட்டுக்கொண்டது. அதே வருடத்தில் சட்ட நிபுணர்கள், ஐக்கிய நாடுகளின் முகவர்கள், அரசுகள், குடியியல் சமூகக் குழுக்களுடனான தொடர்ச்சியான ஆழ்ந்த கலந்துரையாடல்களின் தொடர்ச்சியாக இறுதி வடிவம் துணைக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் 11 ஆம் திகதி ஆகஸ்ட் 2005 இல் முறைப்படி நடைமுறைப்படுத்தப்பட்டது.

பின்ஹெய்ரோ கோட்பாடுகள், இருப்பிட, காணி மற்றும் ஆதன மீளளிப்பை சுற்றியுள்ள முரண்படுகின்ற சட்ட மற்றும் தொழிநுட்ப விடயங்களை எந்தளவு சிறந்த முறையில் தெளிவுபடுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் முகவர்கள் மற்றும் பரந்துபட்ட சர்வதேச சமூகத்துக்கு அரசுகளுக்குரிய நடைமுறை வழிகாட்டல்களை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. முதற் தடவையாக, கோட்பாடுகளனாவை முனைப்பான இருப்பிட, காணி மற்றும் ஆதன மீளளிப்பு தொடர்பான கோரிக்கைகளைக் கையாள்வது தொடர்பில் உலகளாவிய ஒருங்கு சேர்க்கப்பட்ட அணுகுமுறையை வழங்குகின்றன. அவை இருப்பிட, காணி மற்றும் ஆதன மீளளிப்பு உரிமை பற்றிய பரப்பில் சர்வதேச இயல்பான கட்டமைப்பை அதிகரிப்பதுடன் தொடர்ந்திருக்கும் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டங்களில் உறுதியாக நிலையூன்றச் செய்கின்றன.

கோட்பாடுகளின் பிரிவுகள் II-IV (கோட்பாடுகள் 2-10 வரையானவை) தொடர்ந்திருக்கும் மனித உரிமைகளை மீள உறுதிப்படுத்துவதுடன் இருப்பிட, மற்றும் ஆதன மீளளிப்பின் குறிப்பான வினாக்களுக்கு அவற்றை பிரயோகிக்கின்றன. தேசிய கொள்கை வகுப்பாளர்களும் ஐ.நா. மற்றும் அரச சார்பற்ற அமைப்பு அலுவலர்களும் மற்றும் கடதாசிகளில் அமைந்திருக்கும் மீளளிப்பு உரிமைகளை செயலாக மாற்றுவதற்குரிய நடைமுறைப் பரிமாற்றங்களில் ஈடுபட்டிருக்கும் ஏனையோரும் அவை தொடர்பிலான குறிப்பான தொடர்புடைய பிரிவகளாக V-VI (கோட்பாடுகள் 11-22) காணலாம். இத்தகைய பிரிவுகளில், கோட்பாடுகளானவை தேசிய வீடமைப்பு மற்றும் ஆதன மீளளிப்பு நடைமுறைகளையும் அமைப்புக்களையும் அபிவிருத்தி செய்யுமுகமாக விரிவாக விபரிப்பதுடன் இவை சகல இடம்பெயர்ந்தவர்களாலும் அணுகப்படக் கூடியதாக இருப்பதையும் உறுதிப்படுத்துகின்றது. அவை முடிவுகளை மேற்கொள்வதில் இடம்பெயர்ந்தவர்களின் ஆலோசனையினதும் பங்குபற்றலினதும் அவசியத்தை வலியுறுத்துவதுடன், இருப்பிடம் தொடர்பான தொழிநுட்ப விடயங்கள், காணி மற்றும் ஆதனப் பதிவுகள், வாடகைக் குடியிருப்பாளர்கள் மற்றும் ஏனைய வீட்டுரிமையாளர் அல்லாதோர் மற்றும் இரண்டாம் நிலைக்குடியிருப்பாளர்கள் ஆகியவற்றின் அணுகுமுறைகளை எல்லையிடுகின்றன. சட்டவாக்க அளவுகள், எதேச்சாதிகார மற்றும் பாரபட்சமான சட்டங்கள் மீதான தடையானது, மீளளிப்பு முடிவுகள் மற்றும் தீர்ப்புகள் மற்றும் நஷ்டஈடு தொடர்பான விடயங்கள் என்பன பின்னர் விளக்கப்பட்டுள்ளன. இறுதியாக, கோட்பாடு 22 இருப்பிட மற்றும் ஆதன மீளளிப்புக்கான உரிமைகளைப் பாதுகாப்பது பற்றிய சர்வதேச சமூகத்தின் பொறுப்புடமையை ஆராய்கின்றது.

வீட்டுவசதிக்கான உரிமைகள் மற்றும் வெளியேற்றல்களுக்கான நிலையம் (COHRE) அமைப்பானது பின்ஹெய்ரோ கோட்பாடுகளின் அடிப்படையில் விரிவான தொடராக முன்னேற்றம், பயிற்சி, சட்ட ஆதரவு, வழக்கெழு தகைமை, மற்றும் துணைச் செயற்பாடுகளை கிட்டிய எதிர்காலத்தில் கொண்டு நடத்தவுள்ளதுடன் எல்லா இடங்களிலும் உள்ள அகதிகள் மற்றும் இடம்பெயர்ந்தவர்களின் மீளளிப்பு உரிமைகளுக்கான வாக்குறுதியை நிறைவேற்றும் முகமாக உலகம் முழுவதும் உள்ள எமது பங்காளர்களுடன் இணைந்து வேலைத்திட்டங்களை தொடர்ந்து முன்னெடுக்க உத்தேசித்துள்ளது. வெளிவிவகார ராஜாங்க அமைச்சுக்கும் (நோர்வே), வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவலகம் (ஐக்கிய இராச்சியம்), ஐ.நா. அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் (UNHCR), மனிதாபிமான கூட்டிணைப்புக்கும் உதவிகளுக்குமான அலுவலகம் (OCHA), உள்ளக இடப்பெயர்ச்சிக்கான பிரிவு (IDD), கோர்ட்எய்ட் மற்றும் நோர்வே அகதிகள் பேரவைக்கும் COHRE அமைப்பின் இருப்பின் மற்றும் ஆதன மீளளிப்புக்கான உரிமைகள் பற்றிய பணிக்கு அளப்பரிய ஆதரவை வழங்கியமைக்காக COHRE தனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

ஸ்கொட் லெக்கி
நிறைவேற்றுப் பணிப்பாளர், COHRE
இணைப்பாளர், இருப்பிட மற்றும் ஆதன மீளளிப்பு செயற்றிட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதிகளுக்கும் இடம்பெயர்ந்த ஆட்களுக்குமான

வீட்டு மற்றும் ஆதனமீளளிப்பு தொடர்பான ஐக்கிய நாடுகளின் பின்ஹெய்ரோ கோட்பாடுகள்

முகவுரை

உலகம் முழுவதும் கோடிக்கணக்கான அகதிகளும் இடம்பெயர்ந்த ஆட்களும் நிலையற்றதும் நிச்சயமற்றதுமான நிலைமைகளில் தொடர்ந்து வாழ்ந்து வருகின்றமையும், எல்லா அகதிகள் மற்றும் இடம்பெயர்ந்த ஆட்கள் அவர்களின் பூர்வீக அல்லது வழக்கமான வீடுகளுக்கும் காணிகளுக்கும் பாதுகாப்புடனும் கௌரவத்துடனும் தன்னிச்சையாக திரும்பி வருவதற்கான உரிமையொன்றினைக் கொண்டுள்ளனர் என்பதனைக் கருத்திற்கொண்டும்,

பாதுகாப்புடனும், கௌரவத்துடனும் தன்னிச்சையாக திரும்பிவருதலானது, சுதந்திரமான ஒன்றாகவும் நன்கறிவிக்கப்பட்டதாகவும், தனிப்பட்ட தெரிவையும் அடிப்படையாகக் கொள்வதனாலும், அகதிகளுக்கும் இடம்பெயர்ந்த ஆட்களுக்கும் நாடுகள் அல்லது பூர்வீக இடத்தின் பௌதீக, மூலப்பொருள் மற்றும் சட்டப்பாதுகாப்பு பிரச்சனைகள் உள்ளடங்களாக முழுமையானதும், இலக்குக்கொண்டதும், புதிய நடப்புடையதும் மிகச்சரியான தகவல்கள் வழங்கப்படுதலையும்,

அகதிகளதும் இடம்பெயர்ந்த பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளின் உரிமைகளையும், மீள்உறுதிப்படுத்திக் கொண்டும் வீட்டு, காணி மற்றும் ஆதனமீளளிப்புக்கான அவர்களின் உரிமைகள் உத்தரவாதம் செய்யப்படுவதை உறுதிசெய்யும் திடமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதின் தேவையை அங்கீகரித்துக்கொண்டும்,

அகதிகளதும் இடம்பெயர்ந்த ஆட்களினதும் மீளளிப்பு உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கென அண்மைய ஆண்டுகளில் பல தேசிய, சர்வதேச நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதையும், அதேபோன்று பல தேசிய மற்றும் சர்வதேச சட்டங்கள், தராதரங்கள், கொள்கைக் கூற்றுக்கள், உடன்படிக்கைகள் மற்றும் வழிகாட்டிகள் என்பனவும் வீட்டு, காணி மற்றும் ஆதன மீளளிப்பு உரிமையை அங்கீகரித்து மீள்உறுதிப்படுத்தியிருப்பதையும் வரவேற்றும்,

வீடு, காணி மற்றும் ஆதன மீளளிப்புக்கான உரிமையானது மோதல்களுக்கான தீர்வு, மோதல்களுக்குப் பிந்திய சமாதானத்தை கட்டியெழுப்புதல், பாதுகாப்பும் நிலைபேறான திரும்பிவருகையும், சட்டவாட்சியின் ஸ்தாபிதமும், மற்றும் சர்வதேச நிறுவனங்களினதும் பாதிக்கப்பட்ட அரசுகளினதும் சார்பான மீட்டளிப்பு கருத்திட்டங்களின் அவதானமிகு கண்காணிப்புக்கள் என்பன வினைத்திறனான அமுலாக்கத்தை உறுதிசெய்வதில் இன்றியமையாதது என்பதை ஏற்றுக்கொண்டும்,

வீடு, காணி மற்றும் ஆதன மீளளிப்பு கருத்திட்டங்களின் வெற்றிகரமான அமுலாக்கம், மீள்நிலைநாட்டப்படும் நீதியின் ஒரு முக்கிய கூறாக, இடம்பெயர்வு மற்றும் நிலைபேறான சமாதானத்தை, அச்சமூட்டுகின்ற எதிர்கால நிலைமைகளில் கட்டியெழுப்ப பயனுள்ள பங்களிப்பை நல்குமெனவும் நம்புகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவு - I

நோக்கெல்லையும் பிரயோகமும்

கோட்பாடு 1

நோக்கெல்லையும் பிரயோகமும்

1.1 இத்தால் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளதும் அகதிகளுக்கும் இடம்பெயர்ந்த ஆட்களுக்குமான வீட்டு மற்றும் ஆதன மீளளிப்பு தொடர்பான கோட்பாடுகள் அவர்களின் முன்னைய வீடுகள், காணிகள், ஆதனங்கள் அல்லது வழக்கமான குடியிருப்பிடங்கள் என்பவற்றிலிருந்து எதேச்சாதிகாரமாக அல்லது சட்டமுரணாக விலக்கி வைக்கப்பட்டதனால் உருவான இடம்பெயர்வு நிலைமைகளில் வீட்டுவசதி, காணி மற்றும் ஆதன மீளளிப்பு என்பவற்றுடன் தொடர்புபட்ட சட்ட மற்றும் தொழில்நுட்பமான பிரச்சனைகளுக்கான தீர்வளிப்பதில், பொருத்தமான எல்லா தேசிய மற்றும் சர்வதேச செயற்பாட்டாளர்களுக்கு உதவுவதற்காக வடிவமைக்கப்பட்டள்ளது.

1.2 அகதிகள் மற்றும் இடம்பெயர்ந்த ஆட்களுக்கான வீட்டுக்கும் ஆதன மீளளிப்புக்குமான கோட்பாடுகளானவை, தமது முன்னைய வீடுகள், காணிகள், ஆதனங்கள் அல்லது வழக்கமான வசிப்பிடங்களிலிருந்து எதேச்சாதிகாரமாக அல்லது சட்ட முரணாக வெளியேற்றப்பட்டவர்களான அகதிகள், உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆட்கள் மற்றும் தேசிய எல்லைகளைக் தாண்டிச்சென்ற ஆனால் அகதிகள் என்ற சட்ட வரைவிலக்கணத்தினுள் வராத அவ்வாறான நிலையிலுள்ளவர்கள் அனைவருக்கும் சமமாக ஏற்புடையதாகும்.

பிரிவு - II

வீட்டுவசதிக்கும் ஆதன மீளளிப்புக்குமான உரிமை

கோட்பாடு 2

வீட்டுவசதிக்கும் ஆதன மீளளிப்புக்குமான உரிமை

2.1 எதேச்சாதிகாரமாக அல்லது சட்டமுரணாக வீடுகள், காணிகள் மற்றும் ஆதனங்களிலிருந்து அகற்றப்பட்ட எல்லா அகதிகளும் இடம்பெயர்ந்த ஆட்களுக்கும் அந்த வீட்டு, காணி மற்றும் அல்லது ஆதனம் என்பவற்றை மீள்நிலைப்படுத்துவதற்கான உரிமை உண்டு. மீள்நிலைப்படுத்துவது உண்மையாகவே சாத்தியமற்றதாயுள்ள சந்தர்ப்பத்தில் சுயாதீனமான அல்லது பக்கச்சார்பற்ற நியாயசபையொன்றினால் தீர்மானிக்கப்பட்டதன்படி வீட்டு, காணி அல்லது ஆதனத்திற்காக நட்டஈடு வழங்கப்படுதல் வேண்டும்.

2.2 நீதியை மீள்நிலைப்படுத்துவதில் மிக முக்கியமானதொரு மூலகமாக, இடம்பெயர்வுக்கான விரும்பத்தகுந்த நிவாரணமான மீளளித்தல் உரிமையினை அரசுகள் செய்து நிரூபித்துக்காட்டக்கூடியதாக முன்னுரிமையளித்தல் வேண்டும். மீளளித்தலுக்கான உரிமையானது பிரத்தியேகமான உரிமையொன்றாக விளங்குவதுடன், வீட்டு, காணி மற்றும் ஆதனமீளளிப்பு என்பவற்றுக்கு உரித்தான அகதிகளும் இடம்பெயர்ந்த ஆட்களும் உண்மையாக திரும்பிவருவதனையோ அல்லது திரும்பாமல் விடுவதனையோ கவனத்தில் கொள்ளாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவு - III

அடிப்படை ஆதாரக் கோட்பாடுகள்

கோட்பாடுகள் 3

பாரபட்சம் காட்டப்படாதிருப்பதற்கான உரிமை

3.1 ஒவ்வோராளும் இனம், நிறம், பால், வயது, மொழி, சமயம், அரசியல் அல்லது வேறுபட்ட அபிப்பிராயம், தேசிய அல்லது சமூகத் தோற்றப்பாடு, ஆதனம், இயலாமை, பிறப்பு அல்லது ஏனைய அந்தஸ்து காரணமாக பாரபட்சங் காட்டப்படுவதிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான உரிமையை கொண்டுள்ளார்.

3.2 அகதிகளையும், இடம்பெயர்ந்த ஆட்களையும் உள்ளடக்கியதான எல்லா ஆட்களும் சட்டத்திற்கு முன்னால் சமத்துவமாக கருதப்படுகின்றனர் என்பதனையும், மேலுள்ள காரணங்களின் மீது நிகழ்வு ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் அமைந்த பாரபட்சம் தடைசெய்யப்பட்டுள்ளதனை அரசுகள் உறுதிசெய்தல் வேண்டும்.

கோட்பாடு 4

ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான சமத்துவத்திற்கான உரிமை

4.1 வீட்டு, காணி மற்றும் ஆதன மீளளிப்பு தொடர்பான ஆண், பெண் மற்றும் ஆண்பிள்ளை, பெண்பிள்ளை என்பவர்களுக்கிடையேயான சமத்துவ உரிமைகளையும் அரசுகள் உறுதிப்படுத்துதல் வேண்டும். ஆண், பெண் மற்றும் ஆண்பிள்ளை, பெண்பிள்ளை என்பவர்களுக்கிடையேயான சமத்துவ உரிமைகளையும் அரசுகள் உறுதிப்படுத்துகின்ற அதே வேளை பாதுகாப்புடனும் கௌரவத்துடனுமான தன்னிச்சையான திரும்பிவருதல், ஆதன அனுபவிப்புக்கான சட்டப்பாதுகாப்பு, ஆதன சொந்தம், வாரிசுரிமையை சமத்துவமாக அடைந்துகொள்ளல், அதேபோல் வீட்டு, காணி மற்றும் ஆதனங்களை பாவித்தல், கட்டுப்பாடு மற்றும் பெற்றுக்கொள்ளுதல் என்பவற்றையும் அரசாங்கம் உறுதி செய்தல் வேண்டும்.

4.2 வீட்டு, காணி மற்றும் ஆதன மீளளிப்பு தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் என்பன வீட்டின் தலைமை வகிக்கும் ஆண்கள், பெண்கள் ஆகிய இருவரிற்குமான இணைந்த உரிமைகளை அங்கீகரிப்பது என்பதை மீளளிப்பு செயன்முறையின் வெளிப்படையான கூறொன்றாக அரசுகள் உறுதிப்படுத்தல் வேண்டும். அத்துடன் மீளளிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் பால்சார் உணர்வு அணுகுமுறையைப் பிரதிபலிக்கவும் வேண்டும்.

4.3 வீட்டு, காணி மற்றும் ஆதன மீளளிப்பு தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் பெண்களுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் பாதகமாய் அமையவில்லை என்பதனை அரசுகள் உறுதிப்படுத்தல் வேண்டும். பால்நிலை சமத்துவம் தொடர்பாக நன்மைதரும் நடவடிக்கைகளை பின்பற்றுவதனையும் அரசுகள் உறுதிசெய்ய வேண்டும்.

கோட்பாடு 5

இடம்பெயர்வதிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான உரிமை

5.1 தமது வீட்டிலிருந்து, காணியிலிருந்து அல்லது வழக்கமாக வசிக்கும் இடத்திலிருந்து எதேச்சாதிகாரமாக இடம்பெயரச் செய்யப்படுவதற்கு எதிராக பாதுகாப்பு பெறும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.2 சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டங்களின் அதனுடன் தொடர்பான தராதரங்களுக்கு முரண்படாது இடம்பெயர்வுக்கெதிரான பாதுகாப்புக்களை உள்நாட்டுச் சட்டவாக்கங்களில் அரசுகள் இணைத்துக் கொள்ள வேண்டும். அத்துடன் இத்தகைய பாதுகாப்புக்களை அவற்றின் சட்ட நியாயாதிக்கங்களுக்குள் அல்லது வினைத்திறன் கொண்ட கட்டுப்பாட்டுடன் ஒவ்வொருவருக்கும் ஏற்புடையதாகும் வண்ணம் விரிவுபடுத்தல் வேண்டும்.

5.3 தண்டிக்கும் நடவடிக்கையொன்றாகவோ அல்லது யுத்தத்தின் வழிமுறை அல்லது வழிவகையொன்றாகவோ கட்டாயப்படுத்திய வெளியேற்றம், வீடுகளை உடைத்துச் சேதமாக்குதல் மற்றும் விவசாய இடப்பரப்புக்களை அழித்துச் சேதமாக்குதல் அத்துடன் காணியை எதேச்சாதிகாரமான பறிமுதல் அல்லது சுவீகரித்தல் என்பவற்றையும் அரசுகள் தடைசெய்யவேண்டும்.

5.4 அரசினாலோ அல்லது அரசுசாரா செயற்பாட்டாளர்களினாலோ எவரும் இடம்பெயர்வுக்கு உட்படாமலிப்பதை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை அரசுகள் எடுப்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும். தனிநபர்கள், கூட்டுத்தாபனங்கள், மற்றும் இதர அமைப்புக்கள் என்பன அவற்றின் சட்ட நியாயாதிக்கத்தினுள் அல்லது வினைத்திறனான கட்டுப்பாட்டினுள் இடம்பெயர்வை ஏற்படுத்துதல் அல்லது பங்குகொள்ளுதல் என்பவற்றிலிருந்து தடுக்கப்படுவதையும் அரசுகள் உறுதிப்படுத்த வேண்டும்.

கோட்பாடு 6

அந்தரங்கம் மற்றும் இல்லத்திற்கான கௌரவம் என்பவற்றுக்கான உரிமை

6.1 எவருடையதும் அந்தரங்கம் மற்றும் இல்லம் என்பவற்றில் விதிமுறைகளற்று தன்னிச்சையான அல்லது சட்டமுரணான தலையீட்டுக்கு எதிராகப் பாதுகாப்பு பெறுவதற்கான உரிமையை ஒவ்வொருவரும் கொண்டுள்ளனர்.

6.2 எவருடையதும் இரகசியம் மற்றும் இல்லம் என்பவற்றில் எதேச்சாதிகாரமான அல்லது சட்டமுரணான தலையீட்டுக்கு எதிராகப் ஒவ்வொருவருக்கும் முற்பாதுகாப்புக்களின் தகுந்த செயன்முறையினை அரசுகள் உறுதிப்படுத்தல் வேண்டும்.

கோட்பாடு 7

உடமைகளை அமைதியாக அனுபவிப்பதற்கான உரிமை

7.1 ஒவ்வொருவரும் அவரது உடமைகளை அமைதியாக அனுபவிப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளனர்.

7.2 பொதுமக்கள் அக்கறைகளில் உடமைகளை உபயோகித்தல் அனுபவித்தலானது சர்வதேச சட்டத்தின் பொதுக்கோட்பாடுகளினாலும் சட்டத்தினாலும் வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு உபயோகிப்பதில் அரசுகள் அக்கோட்பாடுகளுக்கு கட்டுப்பட்டதாகவே இருக்கும். சாத்தியமான போதெல்லாம், 'சமூகத்தின் அக்கறை' கண்டிப்பாக நோக்கப்படுவதுடன், அதாவது உடமைகளின் அமைதியான அனுபவிப்பு உரிமையின் மீது தற்காலிமானதொரு அல்லது மட்டுப்பாடான குறுக்கீடாகவே இருத்தல் வேண்டும்.

கோட்பாடு 8

போதிளவிலான குடிமனைக்கான உரிமை

8.1 ஒவ்வொருவருக்கும் போதியளவிலான குடிமனைக்கான உரிமை உண்டு.

8.2 அகதிகளும், இடம்பெயர்ந்த ஆட்களும் போதியளவற்ற குடிமனைகளில் வாழ்கின்ற நிலைமைகளைக் இலக்காகக் கொண்டு அவற்றை தணிப்பதற்கான உறுதியான நடவடிக்கைகளை அரசுகள் பின்பற்றுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாடு 9

சுதந்திரமான நடமாட்டத்திற்கான உரிமை

9.1 ஒவ்வொருவருக்கும் சுதந்திரமாக நடமாடுவதற்கான உரிமையும் அவரவர் வசிப்பிடத்தை தெரிவுசெய்து கொள்வதற்கான உரிமையும் உண்டு. எவரும் குறிப்பிட்டதொரு இடப்பரப்பினுள், எல்லையினுள் அல்லது பிராந்தியத்தில் தொடர்ந்து தங்கியிருக்குமாறு விதிமுறைகளற்ற தன்னிச்சையாக அல்லது சட்டமுரணாக கட்டாயப்படுத்தக்கூடாது. அவ்வாறே, எந்தவொரு நபரும் குறிப்பிட்டதொரு இடப்பரப்பினுள், எல்லையினுள் அல்லது பிராந்தியத்தில் இருந்து கட்டாயமாக வெளியேற்றப்படவும் ஆகாது.

9.2 சுதந்திரமான நடமாட்டம் மற்றும் ஒருவர் அவரது வசிப்பிடத்தை தெரிவுசெய்யும் உரிமையானது, தேசிய பாதுகாப்பு, பொதுஒழுங்கு, பொது சுகாதாரம், அல்லது ஒழுக்கம் மற்றும் பிறரின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாப்பதற்காகவும், சர்வதேச மனித உரிமைகள், அகதிகள் மற்றும் மனிதாபிமானச் சட்டமும் அதுதொடர்பான தராதரங்களுக்கும் இணங்கவும் சட்டத்தால் வழங்கப்பட்ட அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைவாகவும் தவிர வேறு எத்தகைய மட்டுப்பாடுகளுக்கும் உட்படுத்தப்பட மாட்டாது என்பதனை அரசுகள் உறுதிப்படுத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி IV

பாதுகாப்புடனும் கௌரவத்துடனும் தன்னிச்சையாக திரும்பிவருவதற்குள்ள உரிமை

கோட்பாடு 10

பாதுகாப்புடனும் கௌரவத்துடனும் தன்னிச்சையாக திரும்பிவருவதற்குள்ள உரிமை

10.1 எல்லா அகதிகளும் இடம்பெயர்ந்த ஆட்களும் பாதுகாப்புடனும் கௌரவமாகவும் அவர்களின் முன்னைய வீடுகள், காணிகள் அல்லது வழக்கமான வசிப்பிடங்களுக்கு தன்னிச்சையாக திரும்பி வருவதற்கான உரிமையைக் கொண்டுள்ளனர். பாதுகாப்பும், கௌரவத்துடனுமான தன்னிச்சையாக திரும்பி வருவதானது சுதந்திரமானதாகவும், தகவலறிந்த நிலையிலும் மற்றும் தனிப்பட்ட தெரிவு என்பவற்றின் அடிப்படையிலுமானதாக இருத்தல் வேண்டும். அகதிகளுக்கும் இடம்பெயர்ந்த ஆட்களுக்கும் நாடுகளிலுள்ள அல்லது பூர்வீக இடத்திலுள்ள பௌதீக, மூலப்பொருள் மற்றும் சட்டப்பாதுகாப்புப் பற்றிய பிரச்சினைகள் என்பவற்றை உள்ளடக்கிய முழுமையானதும், இற்றை வரையிலானதும், குறிஇலக்கு கொண்டதாகவும் மற்றும் மிகச்சரியான தகவல்கள் வழங்கப்படுதல் வேண்டும்.

10.2 எந்த அகதிகளும் இடம்பெயர்ந்த ஆட்களும் அவர்களின் முன்னைய வீடுகள், காணிகள் அல்லது வழக்கமான வசிப்பிடங்களுக்கு தன்னிச்சையாக திரும்பிச்செல்வதற்கு விரும்பினால் அவ்வாறு செல்வதற்கு அவர்களை அரசுகள் அனுமதிக்க வேண்டும். இந்த உரிமையானது அரசின் தொடர்ச்சியான நிலைமைகளின் கீழ் சுருக்கப்படவோ அல்லது விதிமுறைகளற்ற தன்னிச்சையான அல்லது சட்டமுரணான கால மட்டுப்பாடுகளுக்கோ உட்படுத்தப்படலாகாது.

10.3 அகதிகள் மற்றும் இடம்பெயர்ந்த ஆட்களை அவர்களின் வீடுகளுக்கு, காணிகளுக்கு அல்லது வழமையான வசிப்பிடங்களுக்கு திரும்புமாறு நேரடியாக அல்லது மறைமுகமாக கட்டாயப்படுத்தவோ அல்லது பலாத்காரப்படுத்தவோ கூடாது. அகதிகளும் இடம்பெயர்ந்த ஆட்களும் இடம்பெயர்விலிருந்து திரும்புவதை தவிர அவர்கள் விரும்பினால் அவர்களது வீட்டு, காணி மற்றும் ஆதனம் தொடர்பான மீளளித்தல் உரிமைகளைப் புறக்கணிக்காது நிரந்தர தீர்வுகளை விளைவான வகையில் பெற்றுக்கொள்ள இயலுமாதலும் வேண்டும்.

10.4 அகதிகள் மற்றும் இடம்பெயர்ந்த ஆட்களினதும் பாதுகாப்பும் கௌரவமும் நிறைந்த பயனுறுதியான தன்னிச்சை திரும்புதலுக்கு உதவுவதற்காக நிதிசார் மற்றும்/அல்லது தொழில்நுட்ப உதவிகளுக்கு மற்றைய அரசுகளிடம் அல்லது சர்வதேச நிறுவனங்களிடம் அவசியமானபோது அரசுகள் வேண்டுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி V

சட்டம், கொள்கை, செயல்முறை மற்றும் நிறுவனஞ்சார் அமுலாக்க பொறிமுறைகள்

கோட்பாடு 11

சர்வதேச மனித உரிமைகள், அகதிகள், மனிதாபிமான சட்டம் மற்றும் அதனைப் போன்ற தராதரங்களுடன் ஒத்திணையக்கூடிய தன்மை

11.1 வீட்டு, காணி மற்றும் ஆதன மீளளிப்பு தொடர்பான அனைத்து செயல்முறைகள், நிறுவனங்கள், பொறிமுறைகள் மற்றும் சட்டக்கட்டமைப்புக்கள் என்பன முழுமையாக சர்வதேச மனித உரிமைகள், அகதிகள், மனிதாபிமானச் சட்டம் மற்றும் அதனோடு தொடர்பான தராதரங்களுடன் ஒத்திணைந்து செல்வதனையும் பாதுகாப்பு மற்றும் கௌரவத்துடனான தன்னிச்சையாக திரும்பும் உரிமைகள் இதனுள் அங்கீகரிக்கப்பட்டிருப்பதையும் அரசுகள் உறுதிசெய்தல் வேண்டும்.

கோட்பாடு 12

தேசிய செயல்முறைகள், நிறுவனங்கள் மற்றும் பொறிமுறைகள்

12.1 வீட்டு, காணி மற்றும் ஆதன மீளளிப்புக் கோரிக்கைகளை மதிப்பிடுவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் ஒப்புரவான, உரியகாலத்திற்குரிய, சுயாதீனமான, வெளிப்படைத்தன்மையான மற்றும் பாரபட்சமற்ற செயல்முறைகள், நிறுவனங்கள் மற்றும் பொறிமுறைகளை அரசுகள் ஸ்தாபித்து அவற்றுக்கு ஆதரவளித்தலும் வேண்டும். நடைமுறையிலுள்ள செயல்முறைகள், நிறுவனங்கள் மற்றும் பொறிமுறைகள் இத்தகைய பிரச்சினைகளுக்கு பயனுள்ள தீர்வுகளை வழங்குகின்ற சந்தர்ப்பங்களில் நியாயமானதும், தருணத்திற்கேற்ற முறையிலும் மீளளித்தல் மேற்கொள்ளப்படுவதற்கு வசதிசெய்யும் வகையில் நிதி, மனித மற்றும் ஏனைய வளங்களின் போதுமானளவு கிடைக்க வகைசெய்தல் வேண்டும்.

12.2 வீட்டு, காணி மற்றும் ஆதன மீளளிப்பு செயல்முறைகள், நிறுவனங்கள் மற்றும் பொறிமுறைகள் வயது பால் நிலைகளிற்கு கூருணர்வுடையதாகவும் அத்துடன் ஆண், பெண் சமத்துவ உரிமைகளையும் அதேபோன்று ஆண் பெண் பிள்ளைகளின் சமத்துவ உரிமைகளை அங்கீகரிப்பதாகவும் 'பிள்ளையின் சிறந்த அக்கறை' என்ற அடிப்படை ஆதாரக் கோட்பாட்டை பிரதிபலிப்பதனையும் அரசுகள் உறுதிசெய்தல் வேண்டும்.

12.3 வீட்டு, காணி மற்றும் ஆதன மீளளிப்பு செயன்முறைகளிற்கு ஒத்துழைப்பையும், வசதிகளையும் ஏற்படுத்தும் பொருத்தமான நிருவாக, சட்டவாக்க மற்றும் நீதித்துறை நடவடிக்கைமுறைகளை அரசு மேற்கொள்ளல் வேண்டும். இது சம்பந்தமான எல்லா முகவர்களுக்கும் அவர்கள் வேலையை நியாயமாக, உரிய காலத்திற்கேற்ற வகையில் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதற்கு தேவையான போதியளவிலான நிதி, மனித மற்றும் பிற வளங்களை அரசுகள் வழங்குதல் வேண்டும்.

12.4 வீட்டு, காணி மற்றும் ஆதன மீளளிப்பு நடைமுறைகள், நிறுவனங்கள் மற்றும் பொறிமுறைகளின் வினைத்திறனை உறுதிசெய்யக்கூடியதான, நிறுவன ஒழுங்கமைப்பு, ஆளணியைப் பயிற்றுவித்தலும் விடயத்தொக்குகளும், புலன் விசாரணைகளும் முறைப்பாட்டு செயல்முறைகளும், ஆதனத்தின் சொந்தத்தை அல்லது இதர உடமைக்கான உரிமைகளை சரிபார்த்தல், அதேபோன்று தீர்மானஞ் செய்தல், அமுலாக்கல் மற்றும் மேன்முறையீட்டுப் பொறிமுறைகளும் பற்றிய வழிகாட்டி நெறிகளை அரசுகள் ஸ்தாபித்தல் வேண்டும். பாரபட்சங்காட்டப்படுவதிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமையையும் உள்ளடக்கியதான சர்வதேச மனித உரிமைகள், அகதிகள், மனிதாபிமானச் சட்டம் மற்றும் அதேபோன்ற தராதரங்களுக்கேற்ப அவ்வாறான அனைத்து பொறிமுறைகளும் செயற்படுகின்றனவா என்றறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணக்குகளுக்கான மாற்று அல்லது முறைசாரா தீர்வுகளுக்கான பொறிமுறைகளையும் இத்தகைய செயன்முறைகளில் அரசுகள் ஒருங்கிணைக்கலாம்.

12.5 சட்டவாட்சியில் பொதுவானதொரு நிலைகுலைவு நிலை இருப்பின், அல்லது நியாயமாகவும் உரியகாலத்திலுமான வகையில் வீட்டு, காணி மற்றும் ஆதன மீளளிப்பு செயன்முறைக்கு உதவுவதற்கு அவசியமான செயல்முறைகளை அமுல்படுத்துவதற்கு அரசுகளால் இயலாதபொழுது, நிறுவனங்கள் மற்றும் பொறிமுறைகள் என்பன அகதிகள் மற்றும் இடம்பெயர்ந்த ஆட்களுக்கான தற்காலிக பரிபாலனங்களைத் ஸ்தாபித்துக்கொள்வதற்காகவும் மீளளிப்பு நிவாரணங்களின் வினைத்திறன் தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் அவசியமான நிறுவனங்கள் மற்றும் பொறிமுறைகளை பொருத்தமான சர்வதேச முகவர்களிடம் தொழில்நுட்ப உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் அரசுகள் கோருதல் வேண்டும்.

12.6 சமாதான உடன்படிக்கைகளிலும் தன்னிச்சையான சொந்த நாட்டிற்கு திரும்பிவரும் உடன்படிக்கைகளிலும் வீட்டு, காணி மற்றும் ஆதன மீளளிப்பு செயல்முறைகள், நிறுவனங்கள் மற்றும் பொறிமுறைகளையும் அரசுகள் உள்ளடக்க வேண்டும். மீளளிக்கப்படும் உரிமையை விளக்கமாக முதன் நிலைப்படுத்துவதே விருப்பிற்குரிய நிவர்த்தியாக இருக்குமென்பதை சர்வதேச சட்டத்தின் கீழ் அல்லது கவனஞ்செலுத்தப்படாவிடின் சமாதான நடவடிக்கைகள் பாதிப்புறும் என உள்ள அச்சுறுத்தலில் நிவர்த்திகள் தேவைப்படும் வீடு, காணி மற்றும் ஆதனப்பிரச்சினைகள் குறித்து உடன்படிக்கையின் பங்குபற்றுநர்கள் போதியளவு கவனம் செலுத்தப்படுகின்ற குறிப்பான வாக்குறுதிகள் சமாதான உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கோட்பாடு 13

மீளளிப்புக் கோரிக்கை செயல்முறைகளிற்கான அணுகுமுறை

13.1 விதிமுறைகளற்ற தன்னிச்சை முறையாக அல்லது சட்டமுரணாக வீட்டு, காணி மற்றும்/அல்லது ஆதனம் என்பன இல்லாதாக்கப்பட்ட ஒவ்வொருவரும் மீளளிப்புக்கான மற்றும் / அல்லது நட்டஈட்டிற்கான கோரிக்கையொன்றை சுயாதீனமானதும் பக்கச்சார்பற்றதுமான அமைப்பொன்றுக்கு சமர்ப்பிப்பதற்கும் அக்கோரிக்கைகள் தொடர்பாகச் செய்யப்பட்ட முடிவொன்றினைப் பெற்றுக்கொள்வதற்கும் அம்முடிவு பற்றிய அறிவித்தலைப் பெற்றுக்கொள் வதற்குமாக இயலுமாதல் வேண்டும். மீளளிப்புக் கோரிக்கையொன்றை தாக்கல் செய்வதற்கு முன்நிபந்தனைகள் எதனையும் அரசுகள் இடக்கூடாது.

13.2 மீளளிப்புக் கோரிக்கைகள் செயன்முறை தொடர்பான மேன்முறையீட்டு நடபடிமுறைகளையும் உள்ளடக்கிய எல்ல அம்சங்களிலும், நியாயமானதும் உரிய நேரத்திலும், அடையப்பெறக்கூடியதாகவும், கட்டணங்கள் எதுவுமின்றி வயது மற்றும் பால் நிலைகளுக்கு வேறுபாடற்ற உணர்வுத்தன்மையையும் அரசுகள் உறுதி செய்தல் வேண்டும். இச்செயன்முறையில் பெண்களும் முழுமையாக சமத்துவமாக பங்குபற்றக் கூடியதாக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அரசுகள் பின்பற்றுதல் வேண்டும்.

13.3 பிரிந்தும், உடன்துணையற்றதுமான சிறுவர்கள் மீளளிப்புக் கோரிக்கைச் செயல்முறைகளில் பங்குபற்றுவதையும், அவர்கள் முழுமையாக பிரதிநிதித்துவப் படுத்தப்படுவதனையும் பிரிந்தும், உடன்துணையற்றதுமான சிறுவர்களினது மீளளிப்புக் கோரிக்கைகள் தொடர்பான தீர்மானங்கள் எதுவும் "பிள்ளையின் மீதான சிறந்த அக்கறை" எனும் அடிப்படை ஆதாரக்கோட்பாட்டிற்கு அமைவானதாக இருப்பதை அரசுகள் உறுதிசெய்தல் வேண்டும்.

13.4 இடம்பெயர்வின் போதான அவர்களின் வசிப்பிடம், பூர்வீக தேசம், புகலிடங்கோரும் நாடுகள் அல்லது அவர்கள் ஓடிச்சென்ற நாடுகள் பற்றிக் கவனியாது, மீளளிப்புக் கோரிக்கைகளின் செயன்முறையானது அகதிகளினாலும் ஏனைய இடம்பெயர்ந்த ஆட்களினாலும் அடையப்பெறக்கூடியதாக இருப்பதுடன் அதனை அரசுகள் உறுதி செய்தலும் வேண்டும். மீளளிப்புக் கோரிக்கைகள் செயன்முறை தொடர்பாக பாதிப்புக்குள்ளான அனைத்து ஆட்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளதனையும், இச்செயன்முறை தொடர்பான செயல்முறைகள் பற்றிய தகவல்கள் உடனடியாக பெற்றுக்கொள்ளக்கூடியதாக பூர்வீக தேசம், புகலிடங்கோரும் நாடுகள் அல்லது அவர்கள் ஓடிச்சென்ற நாடுகளிலும் காணப்படுகின்றமையை அரசுகள் உறுதி செய்தல் வேண்டும்.

13.5 தகுதிவாய்ந்த கோரிக்கையாளர்கள் தற்பொழுது வசிக்கின்ற பாதிப்புக்குள்ளான இடங்கள் முழுவதும் மீளளிப்புக் கோரிக்கைகளை செயன்முறைக்குட்படுத்தும் நிலையங்களும் காரியாலயங்களும் ஸ்தாபிக்கப்படுவதற்கு அரசுகள் முயலுதல் வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் இலகுவாக அடைந்துகொள்வதில் உதவும் பொருட்டு, தபால் அல்லது பதிலாள் மூலமாகவும் அல்லது தாமே வந்தும் மீளளிப்புக் கோரிக்கைகளை சமர்ப்பித்தல் சாத்தியமாயிருத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். தகுதிவாய்ந்த கோரிக்கையாளர்கள் அனைவரையும் அணுகக் கூடியதனை நிச்சயப்படுத்திக் கொள்ளும் பொருட்டு நடமாடும் பிரிவுகள் அமைக்கப்படுகின்றமையையும் அரசுகள் கவனத்திற்கொள்ள வேண்டும்.

13.6 வீட்டு, காணி மற்றும்/அல்லது ஆதனம் ஆகியவற்றைப் பாவிப்பவர்கள் வாடகைக்கிருப்போர் ஆகியோரை உள்ளடக்கியதாக மீளளிப்புக் கோரிக்கைகளில் பங்குபெறுவதற்கும் கூட்டாக மீளளிப்புக் கோரிக்கைகளை பதிவுசெய்வதற்குமான உரிமை இருப்பதனை அரசுகள் உறுதி செய்தல் வேண்டும்.

13.7 புரிந்துகொள்வதற்கும் உபயோகிப்பதற்கு சாதாரணமாகவும், இலகுவானதகவும் மீளமைப்பு கோரிக்கை படிவங்கள் அமைந்திருப்பதனையும் பாதிப்புக்குள்ளான மக்களின் மொழியில் அல்லது மொழிகளில் அவை கிடைப்பதனையும் அரசுகள் விரிவுபடுத்தல் வேண்டும். பாதிக்கப்பட்ட நபர்களின் மீளளிப்புக் கோரிக்கைப் படிவங்களைப் பூர்த்தி செய்வதற்கும், பதிவுசெய்வதற்குமென பொருத்தமான உதவிகள் கிடைக்கப்பெறும் ஏற்பாடுகளைக் கொண்டிருப்பதுடன் அவை வயது மற்றும் பால்நிலை அடிப்படையிலான பிரதியுணர்வு உள்ளவையாகவும் இருத்தல் வேண்டும்.

13.8 மீளளிப்புக்கோரிக்கைச் செயன்முறையிலுள்ள உள்ளார்ந்த சிக்கல்நிலையின் காரணமாக மீளளிப்புக் கோரிக்கைப் படிவங்கள் போதுமானளவு இலகுவானதாக்கப்பட முடியாதிருப்பின், தகுதிவாய்ந்த கோரிக்கையாளர்கள் தனிப்பட்ட வகையில் நேர்காணப்பட்டு வயது, பால்நிலைகளுக்கு பிரதியுணர்வு கொண்டதாக தேவையான தகவல்களைப்பெற்று அவர்கள் சார்பாக மீளளிப்புக் கோரிக்கைப் படிவங்களை பூர்த்திசெய்து பதிவுசெய்வதற்கு தகுதிவாய்ந்த நபர்களை அரசுகள் பணியில் ஈடுபடுத்தல் வேண்டும்.

13.9 மீளளிப்புக் கோரிக்கைகளை தாக்கல்செய்வதற்கு தெளிவானதொரு காலஎல்லையை அரசுகள் ஸ்தாபிக்க வேண்டும். மீளளிப்பைக் கோர இருக்கக்கூடியவர்களின் எண்ணிக்கை, தகவல்களைத் திரட்டுவதிலும் அவை கிடைக்கப்பெற்றலிலும் இருக்கக்கூடிய பிரச்சினைகள், இடம்பெயர்வின் அளவு, பிரதிகூலமான நிலையில் இருக்கக்கூடிய குழுக்கள் மற்றும் இடர்படும் தன்மையிலிருக்கும் தனிப்பட்டவர்களை இச்செயல் முறைகள் அடையும் வழிவகைகள் மற்றும் நாட்டின் அல்லது பூர்வீகப்பிரதேசத்தின் அரசியல் நிலைமைகள் என்பவற்றை மனதிற்கொண்டு, மீளளிப்பு கோரிக்கைகளை பாதிப்புற்ற எல்லோரும் தாக்கல் செய்வதற்கான போதுமான வாய்ப்பை ஏற்படுத்துமளவிற்கு போதியளவு நீண்டதாக இக்காலஎல்லை இருப்பதை உறுதிசெய்வதுடன் இத்தகவலானது பரந்தளவிற்கு பரப்பப்படல் வேண்டும்.

13.10 கல்வியறிவற்ற, வலதுகுறைந்த ஆட்களையும் உள்ளடங்களாக விசேட உதவிகள் தேவைப்படுகின்ற ஆட்களுக்கு அவர்களின் மீளளிப்புக் கோரிக்கைகளை பெற்றுக்கொள்வதனை மறுக்கப்படாதவகையில் உதவிகளுக்கான ஏற்பாடுகள் காணப்படுவதனை அரசுகள் உறுதி செய்தல் வேண்டும்.

13.11 மீளளிப்புக் கோரிக்கையொன்றை செய்ய நாடுபவர்களுக்கு முடியுமாயின் போதியளவில் இலவசமாக சட்ட உதவிகள் வழங்கப்படுவதனை அரசுகள் உறுதி செய்தல் வேண்டும். சட்ட உதவிகளானவை ஒன்றில் அரசு அல்லது அரசுசாரா (தேசிய அல்லது சர்வதேச) தோற்றுவாய்களிலிருந்து வழங்கப்படலாம். அத்தகைய சட்ட உதவிகள் தேவையான தராதரம் பாரபட்சமின்மை, நியாயம் பக்கச்சார்பின்மை என்பவற்றுடன் மீளளிப்புக் கோரிக்கைகளை பாதிக்காத வகையில் அமைந்திருத்தல் வேண்டும்.

13.12 மீளளிப்புக் கோரிக்கையொன்றைச் செய்தமைக்காக எந்தவொரு நபரும் தண்டனை அச்சுறுத்தலுக்கோ அல்லது தண்டணைக்கோ உள்ளாக்கப் படாமலிருப்பதனை அரசுகள் உறுதி செய்தல் வேண்டும்.

கோட்பாடு 14

தீர்மானமெடுப்பதில் போதியளவிலான கலந்துரையாடலும் பங்குபற்றுதலும்

14.1 தன்னிச்சையாக திரும்பிவருதல் மற்றும் வீட்டு, காணி மற்றும் ஆதன மீளளிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றன பாதிக்கப்பட்ட ஆட்கள், குழுக்கள் மற்றும் சமுதாயங்களுடனான போதுமானளவு கலந்துரையாடல், பங்குபற்றுதலுடன் முன்னெடுக்கப்படுவதை அரசுகளும் ஈடுபாடுள்ள ஏனைய சர்வதேச மற்றும் தேசிய செயற்பாட்டாளர்கள் ஆகியோர் உறுதி செய்தல் வேண்டும்.

14.2 குறிப்பாக பெண்கள், ஆதிக்குடி மக்கள், சாதி மற்றும் இனக்குழும சிறுபான்மையினர், வயோதிபர்கள், வலதுகுறைந்த மற்றும் சிறுவர் ஆகியோர் மீளளிப்பு தீர்மானமெடுத்தல் செயன்முறைகளில் போதுமானளவு பிரதிநிதித்துவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டு உள்ளடக்கப்பட்டுள்ளனரா என்பதனையும் அவர்கள் திறனான வகையில் பங்குபற்றுவதற்கு பொருத்தமான வழிவகைகளும் தகவல்களும் காணப்படுகின்றதா என்பதனையும், அரசுகளும் ஈடுபாடுள்ள ஏனைய சர்வதேச மற்றும் தேசிய செயற்பாட்டாளர்கள் ஆகியோர் உறுதி செய்தல் வேண்டும். வயோதிபர்கள், வீட்டின் தலைமைத்துவத்தை வகிக்கும் தனியான பெண்கள், பிரிந்த மற்றும் உடன்துணையற்ற பிள்ளைகள் மற்றும் வலது குறைந்தோர் ஆகியோர் உள்ளிட்ட இடர்தன்மைக்குட்படக்கூடிய தனிப்பட்டவர்களின் தேவைகள் குறிப்பிட்ட கவனத்தைப் பெறல்வேண்டும்.

கோட்பாடு 15

வீட்டு, காணி மற்றும் ஆதன பதிவேடுகளும் ஆவணப்படுத்தலும்

15.1 அகதிகள் மற்றும் இடம்பெயர்ந்தவர்களின் உரிமைகளை மதிக்கின்றதான ஏதாவது மீளளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களினை மேற்கொள்ளும் போது அவற்றின் உள்ளார்ந்த கூறொன்றாக வீட்டுவசதி, காணி மற்றும் ஆதன உரிமைகளுக்கான பதிவுகளுக்கான தேசிய பலநோக்கு நிலவரைபடங்களை அல்லது ஏனைய பொருத்தமான முறைமைகளை அரசுகள் ஸ்தாபிக்க அல்லது மீள ஸ்தாபித்தல் வேண்டும்.

15.2 வீட்டு, காணி மற்றும் / அல்லது ஆதனம் தொடர்பான ஆதன அனுபவிப்புக்கான சட்டப்பாதுகாப்பினை உறுதிசெய்வதற்கு அவசியமான உரிமைச் சொந்தமுள்ள அல்லது வீட்டுக்கான உரிமைகள் காணி மற்றும் / அல்லது ஆதனம் என்பவற்றுடன் இணைந்ததான பதிவினை அல்லது வேறுபடுத்தல்களை உறுதிசெய்கின்ற நடவடிக்கைகள் ஏதாவது நீதித்துறை, நீதித்துறை தழுவிய, நிருவாக அல்லது வழக்காற்று பிரகடனங்களினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளனவா என்பதனை அரசுகள் உறுதி செய்தல் வேண்டும். அத்தகைய தீர்மானங்களானவை பாரபட்சங் காட்டப்படுவதிலிருந்து பாதுகாப்புப்பெறும் உரிமையை உள்ளடக்கியதுடனான சர்வதேச மனித உரிமைகள், அகதிகள் மற்றும் மனிதாபிமானச் சட்டமும் அதனுடன் தொடர்பான தராதரங்களுடன் இணங்கிச் செல்லுதல் வேண்டும்.

15.3 பாரம்பரிய அல்லது சுதேசிய சமூகங்கள் நிலங்களை கொண்டிருப்பதற்கான கூட்டு உரிமைகளை அங்கீகரிக்கும் அல்லது பதியும் பதிவேட்டு முறைகளையும் பொருத்தமாக கொண்டிருப்பதை அரசுகள் உறுதிசெய்தல் வேண்டும்.

15.4 நடைமுறையிலிருக்கின்ற பதிவுமுறைகள் மோதல்காலம் அல்லது மோதலின் பின்னதான காலத்தில் இல்லாதொழிக்கப்படுவதில்லை என்பதை அரசுகளும் பொறுப்பான ஏனைய அதிகாரசபைகளும் அல்லது நிறுவனங்களும் உறுதிப்படுத்தல் வேண்டும். வீடு, காணி மற்றும் ஆதனப்பதிவேடுகளை அழிவிலிருந்து தடுப்பதற்கான முறைகளாக இவற்றை இருக்கும் இடத்திலேயே பேணிப்பாதுகாப்பது அல்லது அவசியப்படமிடத்து குறுகிய காலத்துக்கு தற்காலிகமாக அகற்றி பாதுகாப்பானதோர் இடம் அல்லது கவனிப்புக்கென மாற்றுவது உட்பட்டவை என்பன இருக்கலாம். பாதுகாப்பிற்காக இவை அகற்றப்பட்டிருப்பின் மோதல்கள் முடிவுற்றவுடன் கூடியவிரைவில் இப்பதிவேடுகள் திரும்பக்கையளிக்கப்படல் வேண்டும். இப்பதிவேடுகளை பிரதிசெய்யவும் (பின்வரிப்பட வடிவமுறை உட்பட) பாதுகாப்பாக அவற்றை மாற்றுவது மற்றும் அப்பிரதிகளின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்தும் வழிமுறைகளை ஏற்படுத்துவது குறித்தும் அரசுகளும் மற்றும் ஏனைய அதிகாரசபைகளும் கவனத்தில் கொள்ளலாம்.

15.5 மீளளிப்புக் கோரிக்கையொன்றினை ஆதரப்படுத்த மற்றும் அல்லது தேவைப்படுத்தப்பட்ட ஏதாவது ஆவணச் சான்றுகள் எதனையும் கோரிக்கையாளர் ஒருவரின் அல்லது அவரின் பதிலாளின் வேண்டுகோளில் அரசுகளும் பொறுப்புள்ள ஏனைய அதிகாரசபைகள் அல்லது நிறுவனங்கள் தமது உடமையிலிருப்பின் வழங்குதல் வேண்டும். அத்தகைய ஆவணச்சான்றுகள் கட்டணமின்றி அல்லது மிகச்சாதாரண கட்டமொன்றில் வழங்கப்படுதல் வேண்டும்.

15.6 அரசுகளும் பொறுப்புள்ள ஏனைய அதிகாரசபைகள் அல்லது நிறுவனங்களும் மேற்கொள்ளுகின்ற அகதிகள் மற்றும் இடம்பெயர்ந்த ஆட்களின் பதிவுகளானது மீளளிப்பு செயன்முறைக்கு உதவுகின்ற பொருத்தமான தகவல்களை, உதாரணமாக தனிப்பட்ட அகதியினது அல்லது இடம்பெயர்ந்த ஆளினது முன்னைய வதிவிடம், காணி, ஆதனம் அல்லது வழமையான வசிப்பிடத்தின் தராதரம் மற்றும் இடவமைவு பற்றிய கேள்விகளை அந்த விண்ணப்பப் படிவங்கள் கொண்டிருப்பதுடன், அவற்றை திரட்டுவதற்குதவுவதாக இருத்தல் வேண்டும். இடம்பெயர்வின் போதான நேர, காலம் உட்பட அகதிகள் மற்றும் இடம்பெயர்ந்த ஆட்களிடமிருந்து பெறப்பட்ட அத்தகைய தகவல்களை எப்போதும் நாடிப்பெறத்தக்கவையாக இருத்தல் வேண்டும்.

15.7 பாரியளவான இடப்பெயர்வு நிலைமைகளின் போது சொந்தம் அல்லது உடமைக்கான உரிமைகளுக்கான ஆவணச்சான்றுகள் இல்லாத நிலைமைகளில் அரசுகள், குறித்த காலத்தின் போது ஆட்கள் தங்கள் வீடுகளை விட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடிச்சென்றமை, வன்முறை அல்லது அனர்த்தம் என்பவற்றிலிருந்து விடுபடுவதற்காக என்றமையினால் அவர்களும் வீடு, காணி மற்றும் ஆதனமீளளிப்புக்கு உரித்துடையவர்கள் என்று ஊகித்து தீர்மானங்களை மேற்கொள்ளலாம். இவ்விதமான சமயங்களில், நிர்வாக மற்றும் நீதிஅதிகாரிகள் ஆவணச்சான்றுதலில்லாத மீளளிப்புக் கோரிக்கைகள் தொடர்பான உண்மை நிலைகளை சுயாதீனமான முறையில் ஸ்தாபித்துக்கொள்ளலாம்.

15.8 நேரடியாக அல்லது மறைமுகமாக அல்லது சர்வதேச மனித உரிமைகள் தராதரங்களுக்கு முரணாகச் செய்யப்பட்ட அல்லது அச்சுறுத்தலின் காரணமாக அல்லது பயமுறுத்தி அல்லது வலுக்கட்டாயப்படுத்தி செய்யப்பட்ட வீட்டுவசதி, காணி மற்றும் அல்லது ஆதன கைமாற்றத்தை வலிதானதாக அரசுகள் கருதக்கூடாது.

கோட்பாடு 16

வாடகைக்கு இருப்போரினதும் உரித்துடையோர் அல்லாதேரினதும் உரிமைகள்

16.1 வீட்டு, காணி மற்றும் ஆதனங்களில் வாடகைக்கு இருப்போரின் உரிமைகளையும், சமூக இடங்கொள்ளலுக்கான உரிமையைக் கொண்டிருப்போரையும் மற்றும் நெறிமுறையான இடங்கொண்டுள்ளோரையும் அல்லது பாவித்துவருவோரினதும் உரிமைகளும் மீளளிப்பு நிகழ்ச்சித் திட்டங்களில் கருத்திற்கொள்ளப்படுவதுடன் அவை அரசுகளால் உறுதி செய்யப்படவும் வேண்டும். முறைசார் உரிமை, உடமை உரிமைகளைக் கொண்டிருப்போர் கொண்டுள்ளதைப் போன்ற அதே விதத்தில் அத்தயை ஆட்கள் வீடு, காணி மற்றும் ஆதனங்களை திரும்பவும் வந்து மீள பெற்றுக்கொண்டு உபயோகிப்பதை சாத்தியமான கூடுதலான அளவில் அரசுகள் உறுதிப்படுத்தல் வேண்டும்.

கோட்பாடு 17

இரண்டாந்தரக் குடியிருப்பாளர்கள்

17.1 இரண்டாந்தரக் குடியிருப்பாளர்களும் எதேச்சாதிகாரமானதும், சட்டவிரோதமானதுமான கட்டாய வெளியேற்றத்துக்கு எதிரான பாதுகாப்பினைக் கொண்டுள்ளனர் என்பதனை அரசுகள் உறுதி செய்தல் வேண்டும். வீட்டு, காணி மற்றும் ஆதன மீளளிப்பு நோக்கங்களுக்காக நியாயப்படுத்தக்கூடியதும் தவிர்க்கமுடியாததுமாகக் கருதப்படுகின்றதான வெளியேற்றல் விடயங்களின் போது, அவை சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திற்கும் தராதரத்திற்கும் இணங்கவே நடைபெறும் என்பதனை அரசுகள் உறுதிசெய்வதுடன், அத்தகைய இரண்டாந்தர குடியிருப்பாளர்கள் சிறந்ததொரு கலந்துரையாடல், போதுமானளவு நியாயமான அறிவித்தல் மற்றும் சட்டப்பரிகாரத்திற்கான சட்ட நிவாரணங்களை வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கிய தகுந்த செயன்முறையிலான பாதுகாப்புக்களை வழங்கப்படுகின்றனர் என்பதனையும் அரசுகள் உறுதி செய்தல் வேண்டும்.

17.2 இரண்டாம் தரக்குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புச் செயற்பாடுகளானது சட்டபூர்வமான உரிமையாளர்கள், குடியிருப்பாளர்கள் மற்றும் வேறு உரிமைகளைக் கொண்டிருப்போர் சம்பந்தப்பட்ட வீட்டை, காணியை அல்லது ஆதனத்தை நியாயமானதும், காலஏற்பாடுகளுக்கு அமைவான முறையில் மீள்பெற்றுக்கொள்வதற்கான உரிமைகளை பாதிக்காதிருப்பதை அரசுகள் உறுதிசெய்தல் வேண்டும்.

17.3 இரண்டாம் தர குடியிருப்பாளர்களை வெளியகற்றல் நியாயபூர்வமானதும், தவிர்க்கமுடியாததுமான நிலைகளில் அரசுகள் தாங்கள் தற்போது இருக்கின்ற வீட்டு வசதியற்ற நிலையில் இருந்து வேறு போதுமான வீட்டை அனுபவிப்பதற்கான வழிகளை கொண்டிராதவர் மற்றும் போதுமான வீட்டை அனுபவிப்பதற்கான தமது உரிமைகள் மீது வேறு வன்முறைகள் பிரயோகிக்கப்பட்டிருப்பவர்களை பாதுகாப்பதற்கான சாதகமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அரசுகள் அத்தகைய குடியிருப்பாளர்களை இனங்கண்டு அகதிகள் மற்றும் இடம் பெயர்ந்தவர்களின் வீட்டு, காணி மற்றும் ஆதன மீட்டளிப்பை ஊக்குவித்தல் முதலான தற்காலிக முறைகள் உள்ளடங்கலான மாற்று வீட்டு, காணி எனபனவற்றை வழங்க வேண்டும். அத்தகைய மாற்று ஏற்பாடுகளிலான குறைபாடுகள் இருப்பினும் அவை பொருத்தமான அமைப்புக்களினால் வீட்டு வசதி, காணி மற்றும் ஆதன மீட்டளிப்பு தொடர்பில் எடுக்கப்படும் முடிவுகளின் நிறைவேற்றம் மற்றும் அமுலாக்கத்தை தேவையற்ற காலதாமதத்துக்கு உள்ளாக்கக் கூடாது.

17.4 இரண்டாந்தர குடியிருப்பாளர்களால் வீட்டு, காணி மற்றும் ஆதனம் என்பன நல்லெண்ண நம்பிக்கை நோக்கில் செயற்பட்ட மூன்றாம் தரப்பினருக்கு விற்கப்பட்டிருக்கும் பட்சத்தில் நிலைகளில் அரசுகள் பாதிக்கப்பட்ட மூன்றாம் தரப்பினருக்கு நட்ட ஈட்டை வழங்குவதற்கான பொறிமுறையை உருவாக்குவதை கவனத்தில் கொள்ளலாம். இடப்பெயர்விற்கான அடிப்படையின் அப்பட்டமான தன்மை எப்படியிருப்பினும் கைவிடப்பட்ட ஆதனக் கொள்வனவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டமுரணான தன்மைக்கான ஆக்க அறிவிப்பு தீய நோக்க ஆதன அக்கறைக்கான உருவாக்கம் என்பனவற்றை விவாதத்துக்குரிய வகையில் இத்தகைய நிலைகளில் அதிகரிக்கச் செய்கின்றன.

கோட்பாடு 18

சட்டவாக்க அளவுகோல்கள்

18.1 அகதிகள் மற்றும் இடம் பெயர்ந்தவர்களின் வீட்டு, காணி மற்றும் ஆதன மீளளிப்புக்கான உரிமை சட்டவாட்சியின் ஒரு முக்கிய பாகமாக அங்கீகரிக்கப்படுவதை அரசுகள் உறுதிப்படுத்த வேண்டும். வீட்டு, காணி மற்றும் ஆதன உரிமையை ஏற்றுக்கொள்ளுதல், திருத்தம், சீர்திருத்தம் அல்லது தொடர்பான சட்டங்களை நீக்குதல், ஒழுங்கு விதிகள் மற்றும் அல்லது நடைமுறைகள் உள்ளடங்கலான தேவையான சட்டவாக்க வழிகளின் ஊடாக அரசுகள் உறுதிப்படுத்த வேண்டும். வீட்டுக் காணி மற்றும் ஆதன மீளளிப்புக்கான உரிமையை பாதுகாப்பதற்கு தெளிவான சீரான மற்றும் தேவைப்படும்போது தனி ஒரு சட்டத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட சட்ட வரம்பை அரசுகள் அபிவிருத்தி செய்ய வேண்டும்.

18.2 பொருத்தமான அனைத்துச் சட்டங்களும் தமது வீட்டு காணி மற்றும் ஆதன மீளளிப்புக்கு சட்டப்படி உரித்துடைய ஒவ்வொரு நபரை மற்றும் அல்லது பாதிக்கப்பட்ட குழுவை மிகவும் குறிப்பாக அகதிகள் மற்றும் இடம் பெயர்ந்தவர்களை தெளிவாக விபரிப்பதை அரசுகள் உறுதிப்படுத்த வேண்டும். இடம்பெயர்வின் போது உடன் வசித்த குடும்ப அங்கத்தவர்கள் வாழ்க்கைத்துணையாளர்கள், குடும்பப்பங்காளர்கள், தங்கி வாழ்வோர், சட்ட வழியுரிமையாளர்கள், மற்றும் முதனிலை உரிமை கோருபவர்களை ஒத்த உரித்துடைய ஏனையோர் உள்ளடங்கலாக துணையான உரிமையாளார்களும் இதைப் போன்றே அடையாளங் காணப்படல் வேண்டும்.

18.3 வீட்டு, காணி மற்றும் ஆதன மீளளிப்பு தொடர்பிலான தேசிய சட்டவாக்கம் உள்ளூர முரண்பாடற்று இருப்பதுடன் முன்னமே நடைமுறையிலுள்ள சமாதான உடன்படிக்கைகள் தன்னார்வ மீள்திரும்பல் உடன்படிக்கைகள் போன்று சர்வதேச மனித உரிமைகள், அகதி மற்றும் மனிதாபிமானச்சட்டம் மற்றும் பொருத்தமான நியமங்களுடன் ஒத்திணைந்ததாக இருப்பதை அரசுகள் உறுதிசெய்தல் வேண்டும்.

கோட்பாடு 19

எதேச்சாதிகாரமானதும் பாரபட்சமானதுமான சட்டங்களை தடை செய்தல்

19.1 மீளளிப்பு செயல்முறையை பாதிக்கும் சட்டங்களை குறிப்பாக எதேச்சாதிகாரமான, பாரபட்சமான, அல்லது வேறுவகைகளில் நியாயமற்ற கைவிடப்பட்ட சட்டங்கள் அல்லது மட்டுப்பாட்டு நியதிச்சட்டங்களை அரசுகள் ஏற்றுக்கொள்ளவோ பிரயோகிக்கவோ கூடாது.

19.2 நியாயமற்ற அல்லது எதேச்சாதிகாரமான சட்டங்களை அல்லது வீட்டு, காணி மற்றும் ஆதன மீளளிப்புக்கான உரிமைகளை அனுபவிப்பதில் பாரபட்சமான விளைவை ஏற்படுத்தும் சட்டங்களை நீக்க அரசுகள் உடனடி நடவடிக்கை எடுப்பதுடன் ஏற்கனவே இச்சட்டங்களின் பிரயோகத்தால் தவறாக ப்பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களையும் உறுதிப்படுத்த வேண்டும்.

19.3 வீட்டு, காணி மற்றும் ஆதன மீளளிப்பு தொடர்பான சகல தேசிய கொள்கைகளும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான உரிமைகளை உத்தரவாதப்படுத்துவதுடன் அவர்கள் பாரபட்சத்திலிருந்து பாதுகாக்கப்பட்டு சட்டத்தி னாலும் நடைமுறையிலும் சமத்துவமாக நடாத்தப்படுவதனை அரசுகள் உறுதிப்படுத்த வேண்டும்.

கோட்பாடு 20

மீளளிப்பு முடிவுகளையும் தீர்ப்புகளையும் அமுல்படுத்தல்

20.1 வீட்டு, காணி மற்றும் ஆதன மீளளிப்புக்கான முடிவுகளையும் தீர்ப்புகளையும் அமுல்படுத்தல் தொடர்பில் அரசுகள் இதற்கென குறிப்பிட்ட பொது முகவர்களை நியமித்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20.2 வீட்டு, காணி மற்றும் ஆதன மீளளிப்பு அதுதொடர்பாக பொருத்தமான அமைப்புக்களினால் செய்யப்பட்ட முடிவுகளுக்கும் தீர்ப்புக்களுக்கும் மதிப்பளிப்பதற்கு, அமுல்படுத்துவதற்கு, செயலுறுத்துவதற்கு உள்நாட்டு மற்றும் தேசிய அதிகாரசபைகள் சட்டரீதியான கடப்பாட்டினைக் கொண்டுள்ளன என்பதனை சட்டத்தினாலும் ஏனைய பொருத்தமான வழிவகைகளினூடாகவும் அரசுகள் உறுதிப்படுத்தல் வேண்டும்.

20.3 வீட்டு, காணி மற்றும் ஆதன மீளளிப்பு முடிவுகளையும் தீர்ப்புக்களையும் செயலுறுத்துவதிலான பகிரங்கத் தடைகளை அகற்றுவதற்கு அரசுகள் விசேட நடவடிக்கைகளைக் கைக்கொள்ளுதல் வேண்டும். மீளளிப்புத்திட்டங்களை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்கள் அல்லது முகவர்களுக்கெதிரான அச்சுறுத்தல்கள் அல்லது தாக்குதல்கள் பூரணமாக விசாரனைக்குட்படுத்தப்பட்டு தண்டனைக்குள்ளாக்கப்படல் வேண்டும்.

20.4 கைவிடப்பட்ட வீட்டு, காணி மற்றும் ஆதனத்தை அழித்தல் அல்லது சூறையாடுதல் என்பவற்றைத் தடுப்பதற்கான விசேட நடவடிக்கைகளை அரசுகள் பின்பற்றுதல் வேண்டும். அழிக்கப்படுவதனையும் சூறையாடப்படுவதனையும் குறைப்பதன் பொருட்டு, கோரப்பட்டுள்ள வீட்டு, காணி மற்றும் ஆதனங்களிலுள்ள உள்ளடக்கங்களை பட்டியலிட்டு பதிவிடும் செயல்முறைகளை வீட்டு, காணி மற்றும் ஆதன மீளளிப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் விடயத்தில் அரசுகள் விருத்தி செய்யதல் வேண்டும்.

20.5 இரண்டாந்தர குடியிருப்பாளர்களுக்கும் ஏனைய பொருத்தமான தரப்பினர்களுக்கும் அவர்களது உரிமைகள் மற்றும் அவர்கள் குடியிருக்கும் வீட்டு, காணி மற்றும் ஆதனங்களிலிருந்து தன்னிச்சையாக வெளியேறத் தவறுகின்றவர்களினதும், குடியிருக்கும் வீட்டு, காணி மற்றும் ஆதனங்களை சேதப்படுத்தல் அல்லது சூறையாடுதல் என்பன உட்பட வீட்டு, காணி மற்றும் ஆதன மீளளிப்பு முடிவுகளுக்கும் தீர்ப்புக்களுக்கும் இணங்கிப் போகாதுவிடின் ஏற்படக்கூடிய சட்ட விளைவுகளையும் அறிவிப்பதனை நோக்கமாகக் கொண்டு பொது தகவல்வழங்கும் பிரச்சார செயற்பாடுகளையும் அரசுகள் அமுல்படுத்துதல் வேண்டும்.

கோட்பாடு 21

நட்ட ஈடு

21.1 மீளளிப்புச் செயல்முறையின் உள்ளார்ந்த கூறொன்றாக முழுமையானதும் பயனுறுதி கொண்ட நட்டஈட்டிற்கான உரிமை எல்லா அகதிகளுக்கும் இடம்பெயர்ந்த ஆட்களுக்கும் உண்டு. நட்டஈடானது பணத்தொகையாக அல்லது பொருட்களாகவோ இருக்கலாம். மறுசீராக்கும் நீதிக் கோட்பாட்டுடன் இணங்கிச் செல்வதன் பொருட்டு, எங்கு மீளளிப்பு நிவாரணமானது உண்மையில் சாத்தியமற்றதாகவுள்ளதோ அப்போது மட்டுமே நட்டஈட்டு நிவாரணமானது பயன்படுத்தப்படுவதனையும் அல்லது பாதிப்புற்ற தரப்பினர் அறிந்துகொண்டு அல்லது தன்னிச்சையாக மீளளிப்புக்கு பதிலாக நட்டஈட்டை ஏற்றுக்கொள்ளும் போது, அல்லது பேச்சுவார்த்தை செய்யப்பட்ட சமாதானத் தீர்வின் நிபந்தனைகளின்படி மீளளிப்பையும் நட்டஈட்டையும் சேர்த்து வழங்கப்படுவதனையும், அரசுகள் உறுதி செய்தல் வேண்டும்.

21.2 மீளளிப்பானது ஒரு விதியாக இருப்பது என்பதனை அரசுகள் உண்மையில் அசாத்தியமற்றதாகக் கருதப்படுகின்ற விதிவிலக்கான சூழ்நிலைகளில் மட்டுமே, அதாவது வீட்டு, காணி மற்றும் / அல்லது ஆதனம் அழிக்கப்பட்டிருக்கும்போது அல்லது அது இருந்திருக்கவில்லை எனவும் சுயாதீன பக்கச்சார்பற்ற நியாயசபை ஒன்றினால் தீர்மானிக்கப்பட்டிருப்பின், உறுதிப்படுத்தல் வேண்டும். அத்தகைய சூழ்நிலைகளிலுங்கூட சாத்தியமான வேளையில் வீட்டு, காணி மற்றும் அல்லது ஆதன உரிமையைக் வைத்திருப்பவர் திருத்துவதற்கு அல்லது மீளக்கட்டுவதற்கான தெரிவொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும். சில சூழ்நிலைகளில் நட்டஈட்டையும் மீளளிப்பையும் ஒன்றிணைப்பானது மிகப்பொருத்தமான நிவாரணமாகவும் நீதியை நிலைநிறுத்தும் வடிவமாகவும் அமையலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி - VI

சர்வதேச நிறுவனங்களையும் உள்ளடக்கிய சர்வதேச சமூகத்தின் வகிபங்கு

கோட்பாடு 22

சர்வதேச சமூகத்தின் பொறுப்புக்கள்

22.1 வீட்டு, காணி மற்றும் ஆதன மீளளிப்பு உரிமை அதேபோன்று பாதுகாப்புடனும் கௌரவத்துடனுமான தன்னிச்சையாக திரும்பி வருவதற்கான உரிமை என்பவற்றை சர்வதேச சமூகமானது மேம்படுத்தவும் பாதுகாக்கவும் வேண்டும்.

22.2 தங்கள் அமைப்புக்களினுள் வாக்களிக்கும் உரிமையைக் கொண்டுள்ள அங்கத்துவ அல்லது நன்கொடையளிக்கும் நாடுகளை உள்ளடக்கிய சர்வதேச நிதிரீதியானதும், வர்த்தகம், அபிவிருத்தி மற்றும் தொடர்புபட்ட ஏனைய நிறுவனங்களும், முகவர்களும் சட்டமுரணானதும் எதேச்சாதிகாரமாக இடம்பெயர்வுக்கு எதிரான தடையை, குறிப்பாக அத்தடையானது கட்டாய வெளியேற்றல் நடைமுறைகள் தொடர்பான சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட தராதரங்களின் கீழ் முழுமையாகக் கவனத்திற்கொள்ள வேண்டும்.

22.3 சர்வதேச நிறுவனங்கள் தேசிய அரசாங்கங்களுடன் இணைந்து பணியாற்றி, தேசிய வீடமைப்பு, காணி மற்றும் ஆதன மீளளிப்பு கொள்கைளிலும் நிகழ்ச்சித்திட்டங்களிலும் நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொண்வதுடன், சர்வதேச மனித உரிமைகள், அகதி மற்றும் மனிதாபிமானச் சட்டமும் அதனுடன் தொடர்புபட்ட தராதரங்களுடனும் அவற்றின் ஒத்தன்மையையும் உறுதிப்படுத்திக் கொள்ள உதவுதல் வேண்டும். அவற்றின் அமுலாக்கத்தினைக் கண்காணிப்பதிலும் சர்வதேச நிறுவனங்கள் ஒத்துழைப்பினையும் வழங்குதல் வேண்டும்.

22.4 சமாதான உடன்படிக்கைகள் மற்றும் தன்னிச்சையாகத் திரும்பிவரல் உடன்படிக்கைகள் வீட்டு, காணி மற்றும் ஆதன மீளளிப்பு ஏற்பாடுகளைக் கொண்டிருப்பதனையும் இது தேசிய செயல்முறைகள், நிறுவனங்கள், பொறிமுறைகள் மற்றும் சட்டக்கட்டமைவு என்பவற்றையும் உள்ளடக்கி இருப்பதனை உறுதிப்படுத்துவதில் ஐக்கிய நாடுகள் சபை உட்பட்ட சர்வதேச நிறுவனங்கள் அதீத பிரயத்தனம் எடுத்தல் வேண்டும்.

22.5 சர்வதேச சமாதான செயற்பாடுகள், தம் பொதுவான ஆணையை முன்னெடுத்துச் செல்கையில் பொருத்தமான வீட்டு, காணி மற்றும் ஆதன மீளளிப்பு கொள்கைகளும் நிகழ்ச்சித்திட்டங்களும் வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தப்பட்டு அமுலாக்கப்படுகின்ற பாதுகாப்பானதும், நிலையானதுமான ஓர் சூழ்நிலையைப் பேணுவதற்கு உதவுதல் வேண்டும்.

22.6 சர்வதேச சமாதான செயற்பாடுகள், அவற்றின் இலக்கின் பின்னணியில் தங்கிநின்று, மீளளிப்பை செயலுறுத்தும் முடிவுகள் மற்றும் தீர்ப்புக்களினூடாக அதனை உள்ளடக்கிய வீட்டு, காணி மற்றும் ஆதன மீளளிப்பு உரிமையின் பாதுகாப்புக்கான ஆதரவளிக்கும்படி வேண்டப்படல் வேண்டும். சமாதான செயற்பாடுகளுக்கான அதிகார ஆணையில் இவ்வகிபங்கு உள்ளடக்கப்படுவதை பாதுகாப்புச் சபை அங்கத்தவர்கள் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.

22.7 சர்வதேச நிறுவனங்கள் மற்றும் சமாதான செயற்பாடுகள் என்பன தற்பொழுது அணுகுவதற்கு அல்லது கட்டுப்பாட்டைக் கொண்டிராத உரிமைகளைக் கொண்டிருப்போரின் வீடு, காணி மற்றும் ஆதனம் என்பவற்றை உபயோகித்துக் கொள்வதை, வாடகைக்கு பெறுவதை அல்லது கொள்வனவு செய்வதை தவிர்ப்பதுடன் அவ்விதமே தங்களின் ஊழியர்கள் நடப்பதையும் வேண்டுதல் வேண்டும். அவ்வாறே, சர்வதேச நிறுவனங்களும் சமாதான செயற்பாடுகளும் அவர்களின் கட்டுப்பாட்டிற்கு அல்லது மேற்பார்வைக்கு கீழுள்ள அமைப்புகள் அல்லது செயன்முறைகள் நேரடியாகவோ மறைமுகமாகவோ வீட்டு, காணி மற்றும் ஆதன மீளளிப்புக்களுக்கு இடைஞ்சலை ஏற்படுத்தாது என்பதனையும் உறுதி செய்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி - VII

பொருள்கோடல்

கோட்பாடு 23

பொருள்கோடல்

23.1 அகதிகளும் இடம்பெயர்ந்த ஆட்களுக்குமான வீட்டு, காணி மற்றும் ஆதன மீளளிப்பு தொடர்பான கோட்பாடுகளானவை சர்வதேச மனித உரிமை, அகதி மற்றும் மனிதாபிமானச் சட்டம் என்பவற்றின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள உரிமைகளையோ, அல்லது தேசிய சட்டங்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அத்தகைய சட்டங்கள் மற்றும் தராதரங்களினால் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளையோ மட்டுப்படுத்துவதாக, திருத்தியமைப்பதாக, அல்லது பாதிப்பதாக பொருள்கோடல் செய்யப்படலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்ஹெய்ரோ கோட்பாடுகளின் பிரயோகம் :

மீளளிப்பு தீர்மானிக்கப்படாதுள்ள சில தெரிவுசெய்யப்பட்டுள்ள இடங்கள்

தற்பொழுது கோடிக்கணக்கான அகதிகளும் இடம்பெயர்ந்தவர்களும் தங்களது வீடு மற்றும் ஆதன மீளளிப்பு உரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்கு போராடுகையில் அவ்விதம் செயற்படமுடியாதபடி வலுவாக தடுக்கப்படுறார்கள். சில இடங்களில் மீள் திரும்புவதையும், மீளளிப்பதையும் அரசாங்கங்கள் ஆதன உரித்துக்களை நீக்கியும், மீளளிப்புக்கோரிக்கைகளை செல்லுபடியாக்குவதற்கு வடிவமைக்கப்பட்ட புதிய சட்டங்களை ஏற்று உருவாக்கியும் மற்றும் அகதிகளும் இடம்பெயர்ந்தவர்களும் விட்டுச்சென்ற வீடுகள், காணிகளில் குடிமக்களை (அதிகளவில் ஆட்சி அல்லது அதிகாரத்திலிருப்போரின் ஆதரவிற்குரிய இனம், மதம் அல்லது மற்றைய குழுவினர்) இருத்துவதன் மூலம் மிக வெளிப்படையாகவும், நன்கு தெரிந்துகொண்டும் தடைசெய்கின்றன. வேறு சில சந்தர்ப்பங்களில் தீர்க்கப்படாத அல்லது தொடர்ந்தும் நடைபெறுகின்ற உள்நாட்டு மற்றும் மோதல்கள், மீள் திரும்பக்கூடிய இடங்களில் கிடைக்கின்ற பொருளாதாரத் தெரிவுகளின் குறைபாடுகள் அல்லது பாதுகாப்புத் தாமதங்கள் பற்றிய கரிசனைகள் என்பனவும் இதற்கு காரணமாக இருக்கலாம்.

தீர்க்கப்படாத மீளளிப்புக்கோரிக்கைகளின் பிரச்சினையானது உலகம் முழுவதிலும் எந்தளவிற்கு பரந்துபட்டதாக உள்ளது என்பதை பின்வரும் இடங்களிலான சம்பவங்கள் எடுத்துக்காட்டுவதுடன், பின்ஹெய்ரோ கோட்பாடுகளின் பிரயோகமானது நியாயமான தீர்விற்கு வழிசெய்யும் ஓர் ஆக்கபூர்வமான முறைகளை வழங்கும் உதாரணமாகவும் திகழலாம்.

ஆப்கானிஸ்த்தான்:

தொடரும் நிலம் சம்பந்தப்பட்ட சர்ச்சைகளும், மீள்திரும்பியவர்களின் நிலங்களின் சட்ட விரோதமான பறிமுதல், உரித்துடையவர்களின் உரிமைகளின் தெளிவின்மை, இருவித சட்டமுறைகள் (வழக்காற்றுச் சட்டம் மற்றும் நவீன சட்டம்) நிலமின்மை, நிலப்பற்றாக்குறை, பெண்களுக்கு எதிரான பாரபட்சம் மற்றும் செயற்றிறன் கொண்ட மீளளிப்பு செயல்முறைகள் இல்லாமை போன்றவற்றினால் பல்லாயிரக்கணக்கான மீள்திரும்புவோர் தமது பூர்வீக இடங்களுக்கு மீள்திரும்ப முடியாமல் உள்ளனர்.

அசர்பைஜான்:

1992-1994இல் நாகோர்னா-கராபாக் மோதல்களின் போது தமது வீடுகள், நிலங்களிலிருந்து விலகியோட கட்டாயப்படுத்தப்பட்ட 535,000 இற்கும் அதிகமான அசெரி இனத்தைச்சேர்ந்த உள்ளக இடம்பெயர்ந்த மக்கள் தொடர்ந்தும் இடம்பெயர்ந்தவர்களாகவே உள்ளனர். ஆர்மேனியவுக்கு தப்பியோடிய மேலுமொரு 200,000 அசெரி இன மக்களுக்கு, அசர்பைஜானில் குடியுரிமை வழங்கப்பட்டது. பூர்வீக வாழிடங்களின் வீடுகள், சொத்துக்களிற்கான மீளளிப்புக்கோரிக்கைகள் இன்னமும் தீர்க்கப்படாத நிலையில் இவ்விரு குழுக்களும் உள்ளனர்.

பூட்டான்:

ஏறக்குறைய இரண்டு தசாப்தங்களாக சில 105,000 அளவிலான பூட்டானிய அகதிகள் கிழக்கு நேபாளத்தில் அகதிமுகாம்களில் வாழ்ந்தனர். பூட்டானிலிருந்து வெளியேற்றப்பட முன்னர் எதேச்சாதிகார முறையில் அநேகரின் குடியுரிமை பறிக்கப்பட்டது. பூட்டானிய அரசாங்கம், இவ்வகதிகள் தங்கள் பூர்வீக வாழிடங்களுக்கு திரும்புவதற்கு அனுமதி மறுத்தது. அநேகமான அகதிகளின் வாழிடங்களும் நிலங்களும் அரசாங்கத்தால் இரண்டாம் நிலை குடியிருப்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக அண்மைய அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

புருண்டி:

200,000இற்கும் அதிகமான உள்ளக இடம்பெயர்ந்த மக்கள் புருண்டி முழுவதுமாக சிதறியிருக்கின்றனர். இதில் முக்கியமாக அண்டை நாடான தன்சானியாவிலிருந்து 100,000 அகதிகள் 2003ஆம் ஆண்டிலிருந்து நாட்டிற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பியுள்ளனர். அதிக எண்ணிக்கையிலான உள்ளக இடம்பெயர்ந்தவர்களுடன் இணைந்ததான அதிகளவிலான மீள்திரும்புதல், நிலங்களின் விலைகளில் பாரிய அதிகரிப்பு, நிலங்கள் தொடர்பான பூசல்கள் மற்றும் அது தொடர்பான பதற்றம் ஆகியவற்றுக்கு இட்டுச்சென்று இவற்றினால் வீடு மற்றும் ஆதன மீளளிப்பு உரிமைகளை நடைமுறைப்படுத்துவதையும் தடுத்தது.

கொலம்பியா:

அரசாங்க இராணுவப்படைகள், இடதுசாரி கெரில்லா குழுக்கள் மற்றும் வலதுசாரி துணைப்படை அமைப்புகளுக்கிடையே தொடரும் ஆயுதமோதல்களின் காரணமாக 30 இலட்சம் மக்கள் கொலம்பியாவில் உள்ளக இடம்பெயர்ந்த மக்களாக உள்ளனர். இன்னுமொரு 250,000 மக்கள் அண்மையிலுள்ள ஈக்குவேட்டர், வெனிசூலா மற்றும் பனாமா ஆகிய நாடுகளுக்கு தப்பியோடியுள்ளனர். கொலம்பியாவின் இடம்பெயர்ந்த மக்கள் பெருமளவில் கொலம்பியாவின் பிரதான நகரங்களைச் சுற்றி மிகவும் குறிப்பாக பொகொட்டா, மெடிலின், கலி மற்றும் கார்டஜினாவிலுள்ள முறையற்ற குடிசைகளிலும் சேரிப்புற நகரங்களிலும் வாழ்கின்றனர்.

குரோஷியா:

1990களிலான மோதல்களின் விளைவாக ஆயிரக்கணக்கான சேபியர்களின் வீடுகள் சேதமாக்கப்பட்டும் அல்லது அழிக்கப்பட்துமான ஓர் உண்மையான நிலையுடன், அகதிகளின் வீடுகளிலிருந்து இரண்டாம் நிலைக்குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு குரோஷிய அதிகாரிகள் விருப்பப்படாமையும் மற்றும் அரசாங்கத்தின் வீடுகளை திருத்தியமைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை சேபியர்கள் பெறுவதை வேண்டுமென்றே உள்ளடக்காத சட்டவாக்கங்கள் போன்றவற்றின் இணைந்த காரணங்களினால் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான சேர்பிய இன அகதிகள் குரோஷியாவிலுள்ள தமது பூர்விக வாழ்விடங்களுக்கு மீள் திரும்ப முடியாதுள்ளனர்.

சைப்பிரஸ்:

1974இல் சைப்பிரஸில் துருக்கியர்களின் ஆக்கிரமிப்பானது 170,000 இற்கும் அதிகளவிலான கிரேக்க சைப்பிரஸ் மக்களை தீவின் வடபகுதியிலிருந்து தென்பகுதிக்கு பலாத்காரமாக இடம்பெயர்ந்து செல்ல வழிவகுத்தது. இதே சமயம் 45,000 அளவு சிறுதொகையினரான துருக்கிய சைப்பிரஸ் மக்கள் வடக்கு நோக்கி நகர்ந்தனர். வீடு மற்றும் ஆதன மீளளிப்புக்கான வாய்மூலக் கோரிக்கைகளானது நாட்டின் பிரதான அரசியல் பிரச்சினைகளாக இவை உள்ளதை உறுதிசெய்கின்றன. மீளளிப்புக் கோரிக்கைகள் குறித்து அமைதி உடன்படிக்கை வரைபில் பிரேரிக்கப்பட்ட ஏற்பாடுகளே 2004ஆம் ஆண்டில் அமைதித்திட்டத்தை பெருமளவில் நிராகரிப்பு செய்தமைக்கு முக்கிய காரணமாக அமைந்தது என்கிற கருத்தை பல ஆய்வாளர்கள் கொண்டுள்ளனர்.

சனநாயக கொங்கோ குடியரசு:

700,000 அளவிலான உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் தங்களது பூர்வீக பிரதேசங்களுக்கு மீள்திரும்பியுள்ள போதிலும், கொங்கோ குடியரசானது இன்னமும் உலகில் அதிகளவிலான உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் தொகையைக் கொண்ட ஒரு நாடாக 15 இலட்சத்திற்கும் அதிகமான உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் மிகவும் வறுமை நிலைமைகளில் வாழுகின்ற ஓர் நாடாகவும் உள்ளது. இருவித முறைகளிலான நிலவுடமை, உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் சொத்துக்களில் குடியிருக்கின்ற இரண்டாம் நிலை குடியிருப்பாளர்களிடமிருந்து சொத்தக்களை மீளப்பெறுவதற்கு நீதிமன்றங்களை அணுகமுடியாத தன்மை என்பன நிலையான மீள்திரும்புதலையும், மீளளிப்பையும் தொடர்ந்தும் தடைசெய்கின்றன.

ஈராக்

1968-2003 இற்கு இடையிலான காலப்பகுதியில் இடம்பெயர்ந்தவர்களிடமிருந்து சுமார் 37,000 வரையிலான வீடு மற்றும் ஆதன மீளளிப்புக் கோரிக்கைகள் ஈராக்கின் ஆதனக் கோரிக்கைகள் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் துருக்கியர்களாலும் மற்றும் அரபுச்சிறுபான்மையினத்தவர்களாலும் மேலதிகமாக சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகளே (75%) பெருமளவு ஆகும். எப்படியிருந்தபோதிலும் பல்வேறு அறிக்கைகளின் படி ஈராக்கின் ஆதனக்கோரிக்கை சபையான போதிய வளங்களின்மை, குறைந்த ஆளணி என்பவற்றால் அதன் பணி முட்டுக்கட்டைகளுக்கு உட்பட்டுள்ளது. சமாப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் அதிகளவாக உள்ளபோது 600 அளவிலான கோரிக்கைகளுக்கு மட்டுமே தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் 150இற்கும் அதிகமான மேன்முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொசோவோ (UNMIK/சேர்பியா மற்றும் மொன்டிநிகிரோ)

கொசோவோவிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையினால் நிருவகிக்கப்படும் வீட்டு ஆதனப் பணியகம், அது பெற்றுக்கொண்ட 29,000 மீளளிப்புக் கோரிக்கைகளில் சில 20,000 அளவிலான கோரிக்கைகளுக்கு தீர்வுகளை வழங்கியிருந்து இதில் 40 வீதமான தீர்வுகள் ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும் 2 இலட்சத்திற்கும் அதிகமான கொசோவோ சேர்பியர்கள் இன்னமும் இடம் பெயர்ந்தவர்களாக கொசோவோ அல்லது சேர்பியா மற்றும் மொன்டிநிகிரோ பகுதிகளில் பாதுகாப்பான நிலப்பகுதி என்று சொல்லப்படும் பகுதிகளில் உள்ளனர். கோசோவோவின் ஆயிரக்கணக்கான ரோமச் சமூகத்தினர் இப்பகுதியெங்கும், அதிகளவில் நகரின் குப்பைகள் கொட்டும் இடங்கள் அல்லது சேரிகளில் மிகவும் பரிதாபமான கீழ்மட்ட நிலைமைகளில் வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள்.

லைபீரியா

5 இலட்சம் அளவிலான உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் லைபீரியாவின் முகாம்கள், ஆக்கிரமிப்புக் குடியேற்றங்கள் மற்றும் வசதிகளற்ற பகுதிகள் என நாட்டின் எல்லாப்பகுதிகளிலும் மிக சீர்கெட்ட நிலைமைகளில் தொடர்ந்தும் வாழ்கின்றனர். 2003ஆம் ஆண்டின் சமாதான ஒப்பந்தத்துக்கு முரணாக, நிலத்திற்கான பூசல்கள், மரபுவழி உரிமைகளை பெண்கள் அடைவதிலான சமத்துவமின்மை, பூர்வீகப் பிரதேசங்களிலுள்ள வீட்டு வசதிகளின்மை, தொடரும் பாதுகாப்பின்மை, பொருளாதார உறுதியின்மை மற்றும் வாய்ப்புகளின்மை போன்ற இடம்பெயர்ந்த பல மக்களை தம் வாழ்விடங்களுக்கு மீள் திரும்புவதிலிருந்து தடுத்தன.

மியன்மார் (பர்மா)

மியன்மாரிலிருந்து (பர்மா) ஏறத்தாழ 5 இலட்சம் அகதிகள் தொடர்ந்தும் தாய்லாந்தின் நகர்பகுதிகளிலும் எல்லைப்புற முகவர்களிலும் வசிக்கின்றனர். இதைவிட மேலும் 10 இலட்சம் அகதிகள் உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்து தொடர்ந்தும் உள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்கப்படைகளால் மேற்கொள்ளப்படும் கட்டாய மீள்அமர்த்தல் குறிப்பாக நாட்டின் கிழக்கு மற்றும் தெற்கிலுள்ள பல்வேறு இனக்குழுக்களை இலக்கு வைத்ததாக இருந்தது. நிலங்களை கைப்பற்றுதல், உள்நோக்கத்தோடு கிராமங்களை அழித்தல் மற்றும் நிலங்களிற்கான வழக்காற்று உரிமைகளை மறுதலித்தல் போன்ற எல்லாம் நாட்டில் இடம்பெயர்வு சிக்கலிற்கு பங்களித்துள்ளன.

பலஸ்தீனம் (இஸ்ரேல்)

வீடு, நிலம் மற்றும் ஆதன மீளளிப்புகள் தீர்க்கப்படாத உலகின் மிகப்பெரியதான பிரச்சினையில், சுமார் 50இலட்சம் பலஸ்தீன அகதிகள் 1948ஆம் ஆண்டிலிருந்து வெளியெற்றப்பட்ட தமது பூர்வீக வாழிடங்கள் மற்றும் நிலங்களுக்கான நியாயமான மீளளிப்புக் கோரிக்கைகளைக் கொண்டுள்ளனர். இந்த உரிமைகள் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபை மற்றும் பொதுச்சபை தீர்மானங்களால் மீண்டும், மீண்டும் மீள் உறுதிசெய்யப்பட்டவையாகும். உண்மையில் எல்லா பலஸ்தீன அகதிகளுமே இன்னமும் உரித்துறுதிகள் திறப்புகள், படங்கள் மற்றும் தமது பூர்வீக இல்லங்கள் மீதான உரிமைகளை நிரூபிக்கும் ஆவணச்சான்றுகளையும் தம்வசம் வைத்துள்ளனர். இதே விதமான தகவல்கள் நியூயோர்க் நகரிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை தலைமையகத்தில் கோப்புக்களிலும் இடப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. தீர்க்கப்படாதுள்ள எல்லா வீடு மற்றும் ஆதன மீளளிப்பு தொடர்பான பிரச்சினைகள் சரியான முறையில் கவனத்தில் கொள்ளப்படாத வரையில் இஸ்ரேல், பலஸ்தீனத்திற்கிடையில் நடைமுறைப் படுத்தப்படக்கூடிய சமாதான திட்டமொன்றிற்கான எதிர்பார்ப்புக்கு இடமில்லை எனும் கருத்தில் நிபுணர்கள் பலரும் இணங்குகின்றனர்.

இலங்கை

இலங்கை அரசாங்கப்படைகளுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இருதசாப்தங்களுக்கும் மேலாக நடைபெறுகின்ற உள்நாட்டு யுத்தமானது, சுமார் 350,000 யுத்தத்தினால் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களை இன்னமும் தங்கள் வீடுகளுக்கு திரும்ப முடியாதளவுக்கு பெருமளவிலான இடம்பெயர்வுக்கு இட்டுச்சென்றுள்ளது. இடம்பெயர்ந்தவர்களது தீர்க்கப்படாதுள்ள மீளளிப்புக் கோரிக்கைகளை தீர்ப்பதற்கு ஸ்தாபிக்கப்படவுள்ள வீடு மற்றும் நிலத்திற்கான ஒரு ஆணைக்குழுவின் விபரமான பிரேரனைகள் தற்பொழுது மோதலில் ஈடுபட்ட இரு சாராரினதும் பரிசீலிப்பின் கீழுள்ளது.

சூடான்

சூடானை சூறையாடிக்கொண்டிருக்கும் மோதலானது உலகில் மிகப் பாரியளவில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரை உருவாக்கியதுடன், உலகின் மிகப் பெரிய மனித அவல நிலை என ஐக்கிய நாடுகள் சபையால் விபரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையையும் உருவாக்கியுள்ளது. சுமார் 60 இலட்சம் மக்கள் அரச துருப்புக்களுக்கும், சூடானிய மக்கள விடுதலை இராணுவம் மற்றும் அரசாங்கத்துடன் இணைந்ததான பல்வேறு சிறிய ஆயுதக் குழுக்களுக்குமிடையிலான சண்டைகளிலிருந்து தப்புவதற்காக தங்கள் வாழ்விடங்களை விட்டு ஓடியதாக கணிப்பிடப்பட்டுள்ளது. டார்பர் நகரிலான பிரச்சினை மட்டுமே, குறைந்தது 50,000 மக்களிற்கு இறப்பை விளைவித்து 16 இலட்சம் மக்களை வீடுகளற்றவர்களாக்கியது. தெற்கு சூடானில் மோதல்களை முடிவுக்கு கொண்டுவந்த ஒரு சமாதான ஒப்பந்தத்திற்கு மாறாக மீளளிப்புக்கான ஓர் பொறிமுறையில்லாமை, நிலம் சம்பந்தமாக உருவாக்கப்படும் பூசல்கள், பெண்களுக்கெதிரான பாரபட்சங்கள் மற்றும் வழக்காற்று உரிமைகளை அங்கீகரிக்காமை போன்றவையெல்லாம் தங்கள் பூர்வீக வாழிடம் மற்றும் நிலங்களுக்கு திரும்ப பலரையும் தடுத்தது.

திபெத் (சீனா)

ஏறத்தாழ ஒரு இலட்சம் திபெத்திய அகதிகள் இந்தியா முழுவதுதிலும் நகர்ப்புறங்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளில் வசிக்கையில், மேலுமொரு 25,000 அகதிகள் நேபாளத்தில் நாடுகடத்தப்பட்டு வாழ்கின்றனர். இவ்வகதிகள் உடன்வரும் காலங்களில் திபெத்திற்கு திரும்புவதென்பதற்கு அரிதான வாய்ப்புகள் உள்ளபோதும், 1959 ஆம் ஆண்டிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டு, தற்பொழுது சீன அதிகார வரம்புகளுக்குட்பட்ட தங்கள் முன்னைய வாழ்விடங்கள் மற்றும் நிலங்களுக்கான மீளளிப்பு உரிமைகளை கொண்டுள்ளனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட தெற்கு ஆசிய மற்றும் தென்கிழக்காசிய நாடுகள்

2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆந் திகதி ஏற்பட்ட சுனாமிப் பேரலை இலங்கையில் 80,000 வீடுகளை அழித்ததுடன், 10 இலட்சம் மக்களையும் இடம்பெயரச் செய்தது. ஒரு வருடம் கழிந்துள்ள போதிலும் 5 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொடர்ந்தும் இடம்பெயர்ந்தவர்களாகவே உள்ளனர். இந்தோனேஷியாவின் ஆச்சேயில் 5 இலட்சம் மக்களை சுனாமி இடம்பெயர வைத்ததுடன், இந்தியாவில் 150,000 மக்கள் வீடுகளை இழந்தனர். இதேபோன்ற பாதிப்புக்கு தாய்லாந்து, மாலைதீவு, மியன்மார் (பர்மா) மற்றும் வேறுஇடங்களிலுள்ள பல்லாயிரம் பேர் உள்ளாகினர். பின்ஹெயிரோ கோட்பாடுகள் இதன்போதும் மற்றும் வேறு அனர்த்தங்களின் பின்னரான நிலைமைகளிலும் இடம்பெயர்ந்தவர்கள் தாம் வசித்த பூர்வீக இடங்களிற்கு தன்னிச்சையாக திரும்புவதற்கான அவர்களின் உரிமைகளுக்கு ஆதரவாகவும் உபயோகிக்கப்படலாம்.

துருக்கி

1980 மற்றும் 1990 களின் போது 20 இலட்சம் அல்லது அதிகமான குர்திஷ் இன மக்கள் வலுகட்டாயமாக மீள்குடியமர்த்தப்பட்டார்கள் அல்லது நாட்டின் குர்திஷ் பகுதிகளில் ஏற்பட்ட வன்முறை மோதல்களினால் தப்பியோடி துருக்கியினுள் உள்ளக இடம்பெயர்ந்தவர்களாக தொடர்ந்தும் உள்ளனர். மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய நீதிமன்றத்தின் எண்ணற்ற தீர்ப்புகள் இடம்பெயர்ந்தவர்களது வீட்டு மற்றும் ஆதன உரிமைகள் நடைமுறைப்படுத்தப்படுவதை வேண்டுகின்ற பொழுதும் இதற்கு மாறாக உள்ளூர் இராணுவ அதிகாரிகளால் இடப்படும் கடுமையான கட்டுப்பாடுகள், இடம்பெயர்ந்தவர்களது நிலங்களில் 'கிராமக் காவலாளர்கள்' இடங்கொண்டிருப்பதும் மற்றும் பாரபட்சம், பாதுகாப்பின்மை பற்றிய பொதுவானதோர் அச்சம் காரணமாக அநேகர் தங்கள் பூர்வீக வதிவிடங்களுக்கு திரும்ப முடியாதுள்ளனர்.

உகண்டா

உகண்டா இராணுவத்துக்கும் கடவுளின் எதிர்ப்பு இராணுவத்தின் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையிலான சண்டையில் தப்பியோடிய 13 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்தவர்களாக உகண்டா முழுவதும் நகரங்கள், கிராமங்களில் அமைந்துள்ள சில 200 முகாம்களில் வதிகின்றனர். மோதல்கள் முடிவடையாத வரைக்கும் நிலையான மீள்திரும்புதலும், மீளளிப்புக்குமான எதிர்பார்ப்புகள் தொலைவிலேயே இருக்கும்.

மேற்கு சகாரா

மேற்கு சகாராவிலிருந்த சுமார் ஒரு இலட்சம் அகதிகள் அல்ஜீரியாவின் நான்கு முகாம்களுக்குள் அடக்கப்பட்டுள்ளனர். மேற்கு சகாராவுக்கும் மொரோக்கோவிற்கும் இடையே நிரந்தர சமாதான ஏற்பாடு ஒன்று அடையப்படாத வரைக்கும், மூன்று தசாப்த காலங்களிற்கு இடம்பெயர்ந்தவர்களாக தங்கள் முன்னைய வதிவிடங்கள், நிலங்கள் மற்றும் ஆதனங்களுக்கான மீளளிப்புக் கோரிக்கைகளை தொடர்ந்தும் கொண்டிருக்கும் அகதிகளின் பிரச்சினைகள் அதிகமாக தீர்க்கப்படுவதற்கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளளிப்புடன் முன்நோக்கி செயற்படுவதன் மூலமாக மட்டுமே யுத்தங்களையும் மோதல்களையும் நிரந்தரமானதொரு முடிவுக்கு கொண்டுவரப்பட முடியும்.

- தியோ வன் போவன்[1]

1 வீட்டுக்கு திரும்பிவருதல்: அகதிகளதும் உள்ளக இடம்பெயர்ந்த ஆட்களினதும் வீட்டு மற்றும் மீளளிப்பு உரிமைகள் இனது முன்னுரையிலிருந்து (2003இல் Transitional Publishers இனால் வெளியிடப்பட்டது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுவசதிக்கான உரிமைகள் மற்றும் வெளியேற்றல்களுக்கான நிலையமானது (COHRE) சுயாதீனமானதும் சர்வதேச அரசுசாரா இலாபநோக்கமற்ற மனித உரிமைகள் அமைப்பொன்றாகும். COHRE அமைப்பானது ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக பேரவையினதும் (ECOSOC) அமெரிக்க அரசுகளினதும் விசேட ஆலோசனை அந்தஸ்துடனும், ஆபிரிக்க மனித மற்றும் மக்களது உரிமைகள் ஆணைக்குழுவில் அவதானிப்பாளர் அந்தஸ்துடனும், ஐரோப்பிய பேரவையில் பங்குபற்றும் அந்தஸ்தினையும் கொண்ட அரசுசாரா அமைப்பொன்றாகும்.

COHRE அமைப்பானது நெதர்லாந்தில் இலாப நோக்கமற்ற மன்றமொன்றாக (அல்லது Stiching) ஆகவும் (இல.41186752) ஐக்கிய அமெரிக்காவில் 501(உ)(3) கீழான இலாப நோக்கமற்ற அமைப்பொன்றாகவும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. மேலும், COHRE அமைப்பானது அவுஸ்த்ரேலியா, பிரேசில் மற்றும் காணா ஆகிய நாடுகளிலும் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

COHRE அமைப்பின் சர்வதேச செயலகம் சுவிட்ஸர்லாந்து ஜெனீவாவில் அமைந்துள்ளதுடன், அங்கிருந்தே COHRE அமைப்பினது உலகளாவிய வீட்டு உரிமைகள் தொடர்பான செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதுடன், அதன் பிராந்திய மற்றும் குறித்த விடயஞ்சார் நிகழ்ச்சித்திட்டங்களையும் செயற்படுத்துகின்றது. பிராந்திய நிகழ்ச்சித் திட்டங்கள் தற்பொழுது ஆபிரிக்கா, அமெரிக்கா மற்றும் ஆசிய பசுபிக் வலயம் என்பவற்றை உள்ளடக்கின்ற அதேவேளை, குறித்த விடயஞ்சார் நிகழ்ச்சித் திட்டங்களானவை பெண்கள் மற்றும் வீட்டு உரிமைகள், வற்புறுத்திய வெளியேற்றங்கள், வழக்காடல், நீர்பெறும் உரிமையும், வீட்டு மற்றும் ஆதன மீளளிப்பு என்பவற்றையும் உள்ளடக்கின்றது.

COHRE இன் வீட்டு மற்றும் ஆதன மீளளிப்பு நிகழ்ச்சித்திட்டம்

1998ஆம் ஆண்டிலிருந்து COHRE இன் வீட்டு மற்றும் ஆதன மீளளிப்பு நிகழ்ச்சித் திட்டமானது (HPRP) வேறுபட்ட, மோதலுக்குப் பின்னரானதும் அனர்த்தத்திற்குப் பின்னரானதுமான பொருத்தப்பாட்டில் அகதிகளும் உள்ளக இடம்பெயர்ந்தோரும் எதிர்நோக்கின்ற மிகப்பரந்ததான வீட்டு, காணி மற்றும் ஆதன மீளளிப்பு சவால்களுக்கு முறைப்படியான தீர்வுகளை வழங்குவதற்காக அரசாங்கங்கள், ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பமைப்புக்கள், அரசுசாரா அமையங்கள், சமுதாய அடிப்படைக் குழுக்கள் உட்பட அகதிகள் மற்றும் உள்ளக இடம்பெயர்ந்தோர் ஆகியோருடன் நெருக்கமாக செயற்பட்டு வருகின்றது. HPRP இனது வேலைத்திட்டமானது மூன்று முக்கிய செயற்பாடுகளினால் பொருள் வரையறைசெய்கின்றது.

மீளளிப்பை மேம்படுத்தல் - அல்பேர்னியா, ஜோர்ஜியா, ஈராக், கொசோவோ, இலங்கை, மற்றும் திமோர் லஸ்தே ஆகிய நாடுகளில் உள்ளக இடம்பெயர்ந்தோரினால் முன்வைக்கப்பட்டுள்ள மீளளிப்பு கோரிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் சட்டங்கள், பொறிமுறைகள், நிறுவனங்கள் மற்றும் வேலைத்திட்டங்களை HPRP ஆனது வடிவமைத்திருக்கின்றது. பூட்டான், கௌதமாலா, மாலைதீவு, மியன்மார் (பர்மா), பலஸ்தீன்/இஸ்ரேல் மற்றும் சேர்பியாவும் மொன்டினெக்ரோவும் ஆகிய நாடுகளில் அல்லது நாடுகளிலும் மேலதிக மீளளிப்பு முயற்சிகள் மேற்கொள்ளவும்படுகின்றன. UNHCR, UN-Habitat, UNDP, OCHA மற்றும் ஐக்கிய நாடுகளின் ஏனைய முகவர்கள் என்போரினால் மீளளிப்பு பிரச்சனைகள் தொடர்பான கொள்கைகள் மற்றும் சட்ட ஆலோசனை என்பவற்றுக்காக COHRE ஆனது வழமையாக அழைக்கப்படுகின்றது.

ஆராய்ச்சி - வீட்டுக்கு திரும்பிவருதல்: அகதிகளதும் உள்ளக இடம்பெயர்ந்த ஆட்களினதும் வீட்டு மற்றும் மீளளிப்பு உரிமைகள் (2003இல் Transitional Publishers இனால் வெளியிடப்பட்டது - இதன் 2ஆம் மற்றும் 3ஆம் பாகம் என்பன Transitional மற்றும் *Cambridge University Press* ஆகியவற்றினால் வெளியிடப்பட்டுள்ளது) உள்ளடங்களாக HPRPஆனது பத்துக்கும் அதிகமான வெளியீடுகளை ஆக்கியுள்ளது. மோதலுக்குப் பிந்திய சமூகங்களில் வீட்டுவசதி, காணி மற்றும் ஆதன உரிமைகள் தொடர்பான புதிய ஐக்கிய நாடுகளின் நிறுவனரீதியான மற்றும் கொள்கைச் சட்டக உத்தேசம் ஒன்றினையும் HPRP ஆனது அண்மையில் நிறைவுசெய்துள்ளது. ஐக்கிய நாடுகளின் சமாதான நடவடிக்கைகள் மற்றும் வீட்டு, காணி மற்றும் ஆதன உரிமைகள் பிரச்சனைகளில் அவற்றின் ஈடுபாடு தொடர்பான ஒப்பீட்டு ஆய்வு ஒன்றினையும் 2007ஆம் ஆண்டில் வெளியிடவுள்ளது.

பயிற்சி - வீட்டுவசதி மற்றும் ஆதன மீளளிப்பு பிரச்சனைகளில் அகதிகளுக்கும் உள்ளக இடம்பெயர்ந்த ஆட்கள் குழுக்களுக்கும் ஆழமானதும் நடைமுறையிலானதுமான பயிற்சிகளையும் தொடர்ந்து HPRP ஆனது வழங்கிவருகின்றது.

HPRP தொடர்பான மேலதிக தகவல்களுக்கு தொடர்புகொள்ள வேண்டியது: *restitution@cohre.org*

COHRE - இலங்கை
இல. 106- 1/1, ஹோட்டன் பிளேஸ்,
கொழும்பு 07, இலங்கை

மின்னஞ்சல் : srilanka@cohre.org
தொலைபேசி : +94 11 2693 143

COHRE சர்வதேச செயலகம்
83 rue de Montbrillant
1202 Geneva, Switzerland
Tel: +41 22 734 1028
Fax: +41 22 733 8336
Email: cohre@cohre.org

www.cohre.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org